
இதழ் 183

# மண்

ஜேர்மனி / 2017
வைகாசி - ஆனி / May - June



தெய்வம் தந்த கலைஞர்
A.ரகுநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேர்மனி - ஒபகௌசன் நகரில் வாழும் திரு.திருமதி டொறின்-மகாலிங்கம் தம்பதிகளின் மகள் ஸ்ரெவ்வானியின் 18வது பிறந்தநாள் நிதி உதவியால் கிளிநொச்சி - ஜெயபுரம் ருத்மினில் 09.04.2017 அன்று உணவு வழங்கப்பட்ட காட்சிகள் சில...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவி நிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

நிலம் தமிழ் மக்களின் அடையாளம், கலாசாரம் வட, கிழக்கை வரலாற்றுபூர்வ வாழ்விடமாகக் கொண்ட தமிழ் மக்களின் 'சுய உரிமைக்கான' பாரிய சவாலாக காணிப் பிரச்சினை தொடர்ந்து இருந்து வருகிறது. அவர்களைப் பொறுத்தவரை, குறிப்பாக வட பகுதி மக்களுக்கு, காணி என்பது பயன்பாட்டுக்கான பொருள் அல்ல.
அவர்களின் அடையாளத்துவம், கலாசாரம், வாழ்க்கை முறையாக நிலம் இருந்து வருகிறது. காணிக்கும் அடையாளத்துக்கும் கலாசாரத்திற்கும் இடையிலான பிணைப்பே தமிழ் மக்களை தனித்துவமான சமூகமாக உலகத்தை நோக்க வைக்கின்றது. வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்பேசும் மக்களுக்குச் சொந்தமான பல்லாயிரம் ஏக்கர் காணிகள், யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 8 ஆண்டுகள் கடந்த நிலையிலும் பாதுகாப்பு படையினர் வசம் இருந்து வருகின்றன. சொந்தக் காணிகளில் மீள்குடியேறி விவசாயம் போன்ற ஜீவனோபாயத் தொழிலை மேற்கொள்ள முடியாமல், நீண்ட காலமாக காத்திருந்து பொறுமையிழந்த அந்த மக்கள், சாத்வீக ரீதியில் போராட்டங்களை ஆரம்பித்திருக்கின்றனர்.

2015 ஜனவரியில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து தமது காணிகள் திரும்பக் கிடைத்து விடுமென்ற நம்பிக்கை அந்த மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த போதும் மீளக்கையளிப்பில் காணப்படும் தாமதத்தால் அவர்கள் மத்தியில் ஏமாற்றமும் விரக்தியும் கவலையும் மீண்டும் அதிகரித்திருக்கின்றன. இராணுவத்தினர் தம்வசமிருந்த பொது மக்களின் காணிகளில் 70 ஆயிரம் ஏக்கர் வரையிலான நிலத்தை விடுவித்துவிட்டதாக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அண்மையில் தெரிவித்திருந்தார். ஆனால் இன்னமும் தனியாருக்கு சொந்தமான எவ்வளவு தொகை நிலம் இராணுவத்தினர் வசமிருந்து வருகின்றதென்பது எவருக்கும் சரியாகத் தெரியாது. அத்துடன் அந்த நிலங்கள் எப்போது விடுவிக்கப்படுமென்பது குறித்தும் எவரும் எதிர்வு கூற முடியாத நிலைமையே காணப்படுகிறது. நீண்ட காலமாக யுத்தத்தாலும் இடப்பெயர்வுகளாலும் அவதியுறும் மக்களின் துன்பங்களை அகற்றுவதற்கு விரிவான திட்டத்தைக் கொண்ட அணுகுமுறை அவசியமாகும். மாகாண நிர்வாகத்துடன் ஒத்துழைத்து மத்திய அரசாங்கம் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். போதியளவு நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டு திட்டங்களை செம்மையான முறையில் அரசியல் குறுக்கீடுகளின்றி நடைமுறைப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த மண்ணுடனும் வாழ்வாதாரத்துடனும் மக்கள் கொண்டிருக்கும் இறுக்கமான பிணைப்பை ஏற்று, அங்கீகரித்து அதற்கு ஏற்புடையதாக திட்டங்கள் அமைய வேண்டும். தமிழ் மக்கள் தொடர்பான சர்வதேசத்தின் கண்ணோட்டத்திற்கு நிலம், அடையாளம், கலாசாரம் என்பவற்றுக்கு இடையிலான ஆழமான பிணைப்பு மிகவும் முக்கியமான விடயமாகும். ஒன்றுடன் ஒன்று கொண்டிருக்கும் இந்த வலுவான பிணைப்பே, தார்மீக ரீதியிலும் கோட்பாட்டு ரீதியிலும் மனித கௌரவத்திற்கு அத்தியாவசியமானதாக விளங்குகிறது. நாடு சுதந்திரமடைந்த பின்னர் வட, கிழக்கின் குடிப்பரம்பல் முறைமையில் மாற்றத்தை மேற்கொள்வதற்கான பல்வேறுபட்ட மறைமுகமான திட்டங்கள் அரசாங்கங்களின் போஷிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வந்ததை அந்த மக்களின் அரசியல் பிரதிநிதிகள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருவதுடன், கடுமையான எதிர்ப்பையும் வெளிப்படுத்தி வருகின்றனர். நாடொன்றின் பிரஜைகள் எந்தவொரு பகுதியிலும் குடியேறி வாழ்வதற்கான உரிமையைக் கொண்டவர்கள் என்பது நியாயபூர்வமானதே. ஆனால் நிலத்துக்கு சட்டபூர்வமான உரித்துடையவர்கள் தமது நிலத்தில் வாழ முடியாமல் வெளியேறிருக்கும் நிலையில், அந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களுக்கு சென்று வாழ அனுமதிக்காமல், வெளியாட்களை அங்கு குடியமர்த்துவதும் பலவந்தமாகக் கையகப்படுத்தி வைத்திருப்பதும் தார்மீக ரீதியாகவும் சட்டரீதியாகவும் அநீதியான செயற்பாடே.

காணி விடுவிப்பு, காணாமல் போனோர் பிரச்சினை, தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் உட்பட தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக 2015 ஜனவரியில் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லையென விசனமும் கவலையும் அதிகரித்திருக்கும் நிலையில் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான ராஜித சேனாரட்ண யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மே தின நிகழ்வில் ஆற்றிய உரையின் போது மீண்டும் அளித்திருக்கும் உறுதிமொழிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறிதளவு ஆறுதலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துபவையாக தோன்றுகின்றன. தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்ட போதும், அவை முழுமையாக நிறைவேற்றப்படுமெனவும் அவர் உறுதியளித்திருக்கிறார். இனங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக அரசாங்கத்தின் தலைவர்கள் கூறிவருகின்றனர். ஆனால் சமூகங்களில் ஒரு சாராரின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் போது, அவற்றைப் பெற்றுக் கொடுப்பதும் அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொடுப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும்!...

-ஆசிரியர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## தூக்கி வினைசெய்....

ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கமுன் அது செய்து முடிக்கக்கூடிய காரியமா என்று சிந்திக்க வேண்டும். முடிக்கலாம் என்று உறுதிப்பட்டால் எப்படி எப்படியான முறைகளில் அதை முடிக்கலாம் என்று சிந்திக்க வேண்டும். திட்டமிட வேண்டும் ஆராயப்பட வேண்டும். அதன் பிறகே அந்தச் செயலைப் புரிய ஆரம்பிக்க வேண்டும். இப்படிச் சிந்தித்து ஆராய்ந்து செயற்பட்டால் அந்தக்காரியம் சிறப்பாக முடியும். இல்லையேல் அரைகுறையிலேயே பாதியில் நின்றுபோகும். "செய்வன திருந்தச் செய்" என்று முதலில் போதித்தவர் மீண்டும் அதையே அழுத்தமாகத் தூக்கி வினை செய் என்கிறார் மூதாட்டி. தூக்கி என்றால் சீர்தூக்கி ஆராய்ந்து என்று பொருள். ஆராய்ந்த பிறகே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும்.

## தெய்வம் இகழேல்....

கடவுளை நீ பார்த்திருக்கிறியா?..இல்லை நீ மட்டுமல்ல யாருமே கடவுளைக் கண்டதில்லை. ஆலயங்களில் கடவுளர்களின் வடிவங்களைக் காண்கிறோம். வணங்குகிறோம். நம்மால் காணமுடியாததினால், கண்ணுக்குத் தெரியாததினால் கடவுள் இல்லை என்று கூறலாமா?. காற்றை நீங்கள் காணமுடிவதில்லை. ஆனால் நம்மால் காற்றை உணரமுடிகின்றது. அதேபோலத்தான் கடவுளையும் நம்மால் உணரமுடியும். நம்பிக்கையோடு பக்தி செலுத்தினால். சிலர் கடவுளே இல்லை என்று வாதிடுவார்கள். சிலர் தங்களுக்குக் கஸ்டம் ஏற்படும்போது ஆண்டவனை நிந்திப்பார்கள்."உன் கோவிலில் இடி விழ...தெய்வமே உனக்குக் கண் இல்லையா"...கல்லால் ஆன உன் இதயமும் கல்லா?..இப்படி எல்லாம் கடவுளை இகழ்ந்து பேசாதே என்கிறார் தமிழ் மூதாட்டி ஔவையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்....

**39-அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.**

அறிவுடை ஒருவனை அதாவது கல்வி அறிவுள்ள ஒருவனைத்தான் அரசனும்-மன்னனும் விரும்புவார்கள் ஆதலால் அனைவருக்கும் கல்வி முக்கியமானதாகும்.

**40-அச்சம் உள்ளடக்கி அறிவு அகத்து இல்லாக் கொச்சை மக்களைப் பெறுதலில் அக்குடி எச்சம் அற்று ஏமாந்து இருக்கை நன்றே.**

அச்சம் உள்ளடக்கி-பயந்தாங்கொள்ளியாக-அறிவு அகத்து இல்லா-புத்தியில்லாத கொச்சை மக்களை உபயோகமற்ற பிள்ளைகளைப் பெறுதலின் பெறுவதைவிட அக்குடி அக்குடும்பத்தார் எச்சமற்று-சந்ததிகளே இல்லாமல் ஏமாந்திருக்கை நன்றே. அறிவும் ஆண்மையும் இல்லாத மக்களைப் பெறுவதைவிடப் பெறாதிருப்பதே நல்லது.

**41-யானைக்கு இல்லை தானமும் தருமமும்.**

யானைக்கு நீளமான தும்பிக்கை இருப்பினும் தான தருமம் செய்யும் வழக்கமில்லை. யானைக்குக் கை நீளம். எனினும் தானதருமம் செய்கின்றதா? இல்லை. கை மட்டும் இருந்துவிட்டால் போதாது. மனமும் வேண்டும்.

**42-பூனைக்கு இல்லை தவமும் தயையும்.**

பூனை கண்மூடி அடங்கி இருந்தாலும் தவமும் தயையும் இல்லை. விரதமும் இரக்கமும் இல்லை. அது கண்ணை மூடிக்கொண்டிருந்தாலும் அது தவம் செய்கின்றது என்றுகூறமுடியுமா?..அந்த நேரத்திலும் எங்கே எலியைப் பிடிக்கலாம் என்றுதான் எண்ணிக்கொண்டிருக்கும். ஆகவே கண்ணை மூடிக்கொண்டிருந்தால் மட்டும் அது தவமாகாது.

**43-ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்.**

ஞானிக்கு இன்பமும் துன்பமும், சுகமும் துக்கமும் இல்லை. இப்படிப்பட்டவர்தான் ஞானி.

**44-சிதலைக்கு இல்லை செல்வமும் செருக்கும்.**

சிதலைக்கு அதாவது கறையானுக்கு செல்வமும் செருக்கும் கர்வமும் இல்லை. செல் எனப்படும் கறையான் செல்வர் என்றும் செருக்கர் என்றும் பேதம்பாராமல் எல்லார் பொருளையும் அரித்துவிடும்.

**45-முதலைக்கு இல்லை நீத்தும் நிலையும்.**

ஆழமான இடம், நிலைகொள்ளும் இடம் எனக்கருத வேண்டிய அவசியம் முதலைக்கு இல்லை. எல்லாம் ஒன்றே. அதேபோல்தான் தக்கது தகாதது என்ற பாகுபாடு மூக்கரிடம் இராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு!......

அன்பு என்ற சொல்லைக் கேட்டாலே அரக்கன்கூட ஒருகணம் இரங்கும் அளவிற்கு சக்தி வாய்ந்த வார்த்தை இது. ஆகவே இந்த வார்த்தைக்கு அளவு என்பது கிடையாது. ஆக இதை அனுபவித்தே உணரமுடியும். கிறிஸ்த்தவ மத போதனையின்படி அன்பு பெருமை கொள்ளாது, இறுமாப்பு அடையாது எல்லோரையும் மன்னித்து ஏற்றுக்கொள்ளும். இந்த அன்புப் பணிக்குச் சிறந்தவராக கிறிஸ்த்துவுக்கு அடுத்தபடியாக எம் அன்னை திரேசாவை நினைக்கிறோம்.

இந்துமதம் அன்பே சிவம் எனப் போதிக்கின்றது. அதாவது பிரிவினைகள் மறந்து நாம் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதாகும். இது மட்டுமா எம் தாய்மொழியாம் தமிழ் மொழியிலும்கூட பொய்யாமொழிப்புலவர் அன்புடையவர்கள் எல்லாவற்றையும் பிறருக்கு எனக்கருதி பிறர் நலத்தோடு வாழும் பொழுது அன்பு இல்லாதவர்கள் எல்லாவற்றையும் தமக்கெனச் சேர்த்து ஒரு தனிமனித நோக்கோடு வாழ்வர் என்றுரைக்கின்றனர்

ஆகவே சமுதாயமாக வாழ அழைக்கப்பட்ட நாம் அதிலும் எதிர்காலத் தூண்களாகிய நாம் நம் வாழ்வில் அன்பை ஆடையாக அணிந்துகொள்வோம். நாமும் சுவைத்து மற்றவர்களுக்கும் இவ் அன்பைச் சுவைக்கச் செய்வோம். அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கி இவ்வுலகை வலம்வருவோம்!...

செல்வன் நபிஷன் சுரேஸ்குமார்
எசன்-ஜேர்மனி

## கொஞ்சம் சிரிப்போம்!........

ஆசிரியர்:-சுரேஸ் முட்டாளுக்கும் அடி முட்டாளுக்கும் என்ன வித்தியாசம்?..
மாணவன்:-நாங்கள் எல்லாம் முட்டாள்கள் சேர்..நீங்கள் எங்களை அடிக்கிறதினால் அடிமுட்டாள் சேர்....

ஒருவன்:-ஏண்டா உங்க அப்பா பெயரை பிரிஜ்ஜிக்குள் எழுதி வைத்திருக்கிறாய்
மற்றவன்:-அவர்தான் சொன்னாரே தன் பெயரைக் கெட்டுப் போகாமல் பார்த்துக்கொள் என்று...

வைத்தியர்:-தினமும் ஒரு பச்சை முட்டை குடி.
நோயாளி:-எங்கட கோழி வெள்ளை முட்டைதான் இடும். எப்படிப் பச்சை முட்டை குடிப்பது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்திசாலிக் கழுதை.......

(செல்வி.யாழரசி யோகராசா)
(ருத் மிஷன்-கிளிநொச்சி)

ஒருநாள் ஒரு காட்டுப் பகுதியில் கழுதை ஒன்று மேய்ந்துகொண்டிருந்தது. கழுதையைக் கவனித்த ஓநாய் ஒன்று அதைப் பிடித்து உண்ணும் நோக்கத்துடன் அதன்மீது பாய்ந்தது. தனக்கு வந்த ஆபத்தைக் கண்டு பயந்தது கழுதை. ஓநாயை எதிர்த்துச் சண்டைபோடுவது கடினம் அதனால் ஏதாவது ஒரு தந்திரம் செய்து தான் தப்பித்துக்கொள்ள வேண்டும் எனக்கழுதை நினைத்தது. ஓநாயின் பாய்ச்சலின்போது சற்று விலகிக்கொண்டு "ஓநாயாரே உம்முடைய வலிமையின் முன்னால் நான் எம்மாத்திரம்"..."நான் இன்று உமக்கு இரையாகப்போவது உறுதி. இதை யாராலும் தடுக்க முடியாது. இரையாவது உறுதியான விடையமாகும். இதற்கு முன்னால் நான் சொல்லக்கூடிய விடையத்தைத் தயவுசெய்து கேட்க வேண்டும்" என வேண்டிக் கொண்டது.

நீ என்ன சொல்ல விரும்பினாய் இதைச் சீக்கிரம் சொல் என்று ஓநாய் உறுமியது."ஓநாயாரே எனது காலில் பெரிய முள் ஒன்று குத்திவிட்டது. முள்ளை எடுக்க நான் எவ்வளவு முயற்சித்தும் முடியாமல் போய்விட்டது காலில் முள் உள்ள நிலையில் நீர் என்னை அடித்துச் சாப்பிட்டால் அந்த முள் உமது தொண்டையில் மாட்டிக் கொள்ளும் அது உமக்கு உயிர் ஆபத்தைத் தந்துவிடும்" எனவே தயவுகூர்ந்து என் காலில் உள்ள முள்ளை எடுத்துவிடும். அதற்குப்பின் நீர் என்னை அடித்து உண்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை எனக் கழுதை கூறியது.

ஏமார்ந்த ஓநாய் ஒத்துக்கொண்டது. கழுதை தனது பின்னங்காலை திருப்பிக் காண்பித்தது. ஓநாய் கழுதையின் பின்னங் காலில் முள் இருக்கின்றதா? எனத்தேடும் வேளையில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முழுப்பலத்தையும் ஒன்றுதிரட்டிய கழுதை தன் பின்னங்கால்களால் ஓநாயைப் பலமாக உதைத்தது. கழுதையின் உதை தாங்காமல் ஓநாய் துடி துடித்துச் சரிந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்னடுத்திக்கொண்டு கழுதை தப்பித்து ஓடியது. ஆகவே இக்கதையின் மூலம் பலசாலிகளால் நமக்குக் கெடுதல் வந்தாலும் நமது புத்திகூர்மையைப் பாவித்து தப்பித்துக் கொள்ளலாம் என்பதைப் புரிந்து வாழ்வோம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேராத இடத்தில் சேர்ந்தால் வராத துன்பம் வரும்........

(செல்வி மௌசிகா மகேந்திரன் -ருத் மிஷன்-கிளிநொச்சி)

ஒரு மன்னனின் படுக்கையறைக் கட்டிலில் மென்மையான மெத்தை ஒன்று போட்டிருந்தார்கள். அந்த மெத்தையிலே ஒரு சீலைப்பேன் வாசம் செய்துகொண்டிருந்தது. மன்னன் இரவில் படுத்துறங்கும்போது சீலைப்பேன் மன்னனின் குருதியை உறுஞ்சிக் குடித்து மகிழ்ச்சிகரமாக வாழ்ந்தது. மிகவும் நுண்ணிய ஒரு ஜீவராசியாக இருந்ததால் அது கடிப்பது மன்னனுக்கு சற்றும் தெரியாது. ஒரு துளியளவு குருதியையே குடிக்கும் ஆதலால் மன்னனுக்கு எவ்வித துன்பமும் ஏற்படுவதில்லை. ஒரு நாள் எங்கிருந்தோ ஒரு பெரிய மூட்டைப்பூச்சி கட்டிலின் மெத்தைக்கு வந்துவிட்டது.

அதைக்கண்ட சீலைப்பேன் அச்சம் கொண்டது. அது மூட்டைப்பூச்சியைப் பார்த்து "ஐயா இந்த இடம் எனக்கு மட்டுமே சொந்தம் நீங்கள் இங்கு வரக்கூடாது உடனே போய்விடும்" எனக்கூறியது. "தோழனே என்னைப் பற்றி அறியாததால் அச்சப்படுகிறாய் நான் நட்புக்கு இனியவன் உன்னிடம் நட்புக்கொண்டு ஒரு நண்பனாக இருப்பது பெரும் பேறு என்று வந்தேன்" நிரந்தரமாக நான் இங்கு இருக்க மாட்டேன் ஒரு விருந்தாளியாக என்னை ஏற்றுக்கொள் இரண்டொரு நாட்கள் இருந்துவிட்டுப் போய்விடுகிறேன் என்று மூட்டைப்பூச்சி கூறியது.

"ஐயா உனது இயல்பும் நடவடிக்கையும் வேறு. என்னுடைய இயல்பும் செயற்பாடும் வேறு. நாங்கள் இருவரும் நண்பர்களாக இருக்க முடியாது. சேராத இடத்திலே சேர வேண்டாம் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். நீர் சீக்கிரம் இந்த இடத்தைவிட்டுப் போய்விடும்." என்று சீலைப்பேன் வேண்டிக் கொண்டது. மூட்டைப்பூச்சி மிகவும் தந்திரமாக சாகசத்துடன் பேசிச் சீலைப்பேனின் நட்பைப் பெற்றுவிட்டது. ஒரு நாள் இரவு மூட்டைப்பூச்சி மிகவும் தந்திரமாக கட்டிலில் படுத்திருந்த மன்னனின் உடலை இலேசாகக் கடித்து இரத்தத்தை ருசி பார்த்தது. மற்றச் சாமானிய மனிதர்களின் குருதியைவிட மன்னனின் குருதி மிகவும் சுவையாக இருந்ததைக் கண்ட மூட்டைப்பூச்சி வெற்றியடைந்து முழு வேகத்துடன் மன்னனைச் சுருக் என்று கடித்துக் குருதியை உறிஞ்சியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டைப்பூச்சியின் கடியினால் ஏற்பட்ட வலி தாங்கமாட்டாத மன்னன் உடனே காவலர்களை அழைத்து ஏதோ தன்னைக் கடித்ததாகக் கூறினான். மூட்டைப் பூச்சியோ ஒரே ஓட்டமாக ஓடி மறைந்து கொண்டது. காவலர்கள் மெத்தையை எடுத்து சோதனை போட்டார்கள். அவர்கள் கண்களில் சீலைப்பேன் தட்டுப்பட்டது. அதை எடுத்து மன்னனிடம் காண்பித்து "மன்னர் பெருமானே இந்தச்சிறிய சீலைப்பேன் தான் தங்களைக் கடித்தது" என்று கூறி அதை நசுக்கிச் சாகடித்துவிட்டனர். பாவம் சேலைப்பேன். இக்கதையின் மூலம் சேரத்தகாத இடத்திலே சேர்ந்து நட்புக் கொண்ட சீலைப்பேன் உயிரை இழக்க வேண்டி நேரிட்டது என்ற உண்மையைப் புரிந்துகொள்வோமாக!...

----------------------

## அறிந்து கொள்வோம்..... தலைமுறைகள்!......

பூட்டன் + பூட்டி - நான்காம் தலைமுறை
ஒட்டன் + ஒட்டி - ஐந்தாம் தலைமுறை
சேயோரன் + சேயோன் - ஆறாம் தலைமுறை
பரன் + பரை - ஏழாம் தலைமுறை
பரன் + பரை - பரம்பரை
ஒரு தலைமுறை - சராசரி 60 வருடங்கள்
ஏழ தலைமுறை - 480 வருடங்கள்
ஈரேழ தலைமுறை - 960 வருடங்கள்

கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்கள் ஆக பரம்பரை என்று சொல்வதன் பொருள் ஈரேழ பதின்நான்கு தலைமுறை என்று பொருள்வரும். வேறெந்த மொழிகளிலும் இப்படி உறவு முறைகள் இல்லை என்பது சிறப்பாகும்.

திருமதி ஜெயா நடேசன்
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "எ" பழமொழிகள்...

செல்வி சிறி சுகன்யா
றீந் றிஷைன் - கிளிநொச்சி

01-எடுக்கிறது பிச்சை ஏறுகிறது பல்லக்கு.

02-எட்டிப் பழுத்தென்ன ஈயார் வாழ்ந்தென்ன.

03-எண் இல்லாதவர் கண் இல்லாதவர்.

04-எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்.

05-எண்ணிச் செய்வது செட்டு எண்ணாமல் செய்வது வேளாண்மை.

06-எதார்த்தவாதி வெகுசன விரோதி.

07-எதிர்த்தவன் ஏழை என்றால் கோபம் சண்டாளம்.

08-எதை அடக்கா விட்டாலும் நாக்கை அடக்க வேண்டும்.

09-எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்.

10-எருதின் நோய் காக்கைக்குத் தெரியுமா.

11-எலி அழுதாலும் பூனை விடுமா.

12-எலி இருக்கிற இடத்தில் பாம்பும் இருக்கும்.

13-எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.

14-எழுதாக் கடன் அழுதால் தீருமா.

15-எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா.

16-எழுதி வழங்கான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்.

17-எள்ளுக்கு ஏழ உழவு கொள்ளுக்கு ஓர் உழவு.

18-எறும்புக்குத் தன் கையால் எண்சாண்.

## பொன்மொழிகள்.....

1-போற்றுதல்களைக்கண்டு புளங்காங்கிதம் கொள்ளாமல் தூற்றுதல்களைக் கண்டு துவண்டு போகாமல் தர்ம வழியில் நடப்பவர்களே இறந்தும் இறவாத புகழை அடைகின்றார்கள்.

2-சத்தியம் தவறாதே தர்மவழியில் பிசகாதே எதிர்க்க முனைவோர்க்கு எரிந்து ஒளிகொடு ஏற்றும் ஏணியென எல்லோர்க்கும் வாழ்வுகொடு இறந்தாலும் இறவாத புகழுக்கு நீ சொந்தக்காரன்.

3-பகல் இருந்தால் இரவும், வரவு இருந்தால் செலவும், உறவிருந்தால் பிரிவும் எப்படி நிட்சயமானதோ அதுபோலத்தான் பிறப்பிருந்தால் இறப்பும் இவ்வுலகில் நியதி.

4-அன்பைச் செய்கிறவர்களால்தான் அன்பு இருப்பதை உணரமுடியும். உண்மையான அன்பினால் தங்களைக் கொடுக்க முடியாதவர்களால் எங்குமே அன்பை உணரமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 6

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | 8 | 2 |
| | | 9 | 4 | | 8 | | | |
| 7 | | | | | 5 | | | |
| | | 6 | 3 | 7 | | 8 | | |
| | 3 | | | | | | 4 | 7 |
| | 9 | | 1 | | 4 | | | |
| 6 | | 3 | | | | 5 | | 8 |
| 1 | | | | | 3 | | 7 | |
| | | | | 2 | | | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 95
## (வைகாசி - ஆனி - 2017)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01-04 இலங்கையில் ஒரு நகரம்

14-15 நம் நாட்டு மரங்களில் காணப்படுவது

வ – இ:

12-09 முகம் பார்ப்பது

16-15 பொழுது ஒன்று

கீ – மே:

14-06 ஊர்வன ஒன்று

16-08 பறவை ஒன்று

மே – கீ:

01-13 முன்னைய காலங்களில் பிரயாண சாதனம்.

07-11 உறுப்புக்களில் ஒன்று

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையும் மனிதனும்.........

செல்வி யசீகா சிவபாலன்
எசன்-ஜேர்மனி

மூவாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் எழுந்த வேதகால இலக்கியங்கள் அக்கால மனிதனின் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. வேதகால மக்கள் காற்று, அக்கினி, நிலம், நீர் என்னும் இயற்கைக்கூறுகளைக் கண்டு பயந்து அவற்றிற்குத் தெய்வாம்சம் கொடுத்து வழிபட்டனர். யாகங்களில் அக்கினியை அழைத்து ஆவிப்பொருளைக் கொடுத்து வழிபட்டனர்.

இவ்வாறு பல தெய்வ வழிபாட்டில் நின்ற மனிதன் பின்னர் எல்லாவற்றிற்கும் மேலான ஒரு சக்தி உண்டு. அதுவே அனைத்தையும் இயக்குகின்றது என உணர்ந்தனர். இது ஆதிகால மனிதனின் நிலை. காலம் செல்லச் செல்ல மனிதன் இயற்கையைத் தன் வசமாக்கினான். காற்றின் துணை கொண்டு பாய்விரித்துக் கப்பல் ஓட்டினான். காற்றாட்டிகளால் ஆலைகளை இயக்கினான். ஆற்றின் துணை கொண்டு பெரும் மரக்குற்றிகளை வே று இ ட ங் க ளு க் கு க் கொண் டுசென் றான் . விஞ் ஞானம் ஆற்றின் வீழ்ச்சியில் மின்சாரம் கண்டது. அக்கினியை இயக்கச் சக்தியாக்கினான். இவ்வாறு இயற்கையைத் தன்வசமாக்கிய மனிதன் இயற்கைச் சக்திகளை வெல்ல முற்படுகிறான் மனிதன். உயிர் வாழ்க்கைக்கு அவசியமான காற்று, தொழிற்சாலைகளும், வாகனங்கள் வெளியேற்றும் புகையால் மாசடைகின்றது. "நீர் இன்றி அமையாது உலகம்"என்றார் வள்ளுவர். அத்தகைய நீரும் ஆழ்துளைக் கிணறுகளால் உறிஞ்சப்படுகின்றன. கடல் நீர் வெற்றிடத்தை நிரப்பி வருகிறது.

இயற்கை மனிதனுக்கு அளித்த வரப்பிரசாதம். காடுகள், மரங்கள், நிழல் தருகின்றன, மழையை வருவிக்கின்றன. அப்படி எம்மைப் பராமரிக்கும். மனிதனோ அவற்றைத் தறித்து அழிக்கின்றான். மரங்கள் தாகத்திற்குப் பானம் தந்து பசிக்கு உணவு ஊட்டி, நோய்க்கு மருந்தாகப் பயன்படுகின்றன. இன்னும் வசிக்க வீடு ஆகியும் உடுக்க உடையாகவும் பயன்படுகின்றன. மரம் கொடுப்பதற்காகவே கைகளை ஆம் கிளைகளை நீட்டுகின்றது, மனிதனோ வாங்குவதற்காகவே கைகளை நீட்டுகின்றான். மரம் வானத்தை நோக்கி வளர்கிறது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் புழுதியில் புரள்கிறான். மரங்களாக முடியாவிட்டாலும் மரங்களைப் படைக்கவாவது மனிதனுக்குத் தெரிகிறதா?. இயற்கைச் செல்வங்களான காற்று, நிலம், நீர் என்பவற்றைப் பேணிப் பாதுகாத்து நோயற்று வாழ மனிதன் பழகிக்கொள்ள வேண்டும். இயற்கையைப் போற்றாது விட்டால் அது சீற்றம் கொள்ளும். எரிமலை வெடிக்கும். அக்கினியைக் கக்கும். கடல் சுனாமியாகும். பூமி நடுங்கும். தென்றல் புயலாகும். இவற்றிலிருந்து தன்னை மனிதன் பாதுகாத்துக்கொள்ள இயற்கையைப் பேணவேண்டும்!..

----------------

## தகவல் துளிகள்...

1-உலகில் மிகப்பெரிய பாலைவனம் சகார (ஆபிரிக்காக்கண்டம்) இதன் பரப்பளவு சுமார் 84.00.000 சதுரகிலோ மீட்டர். 2வது அவுஸ்திரேலியாவிலுள்ள பாலைவனமாகும் இதன் பரப்பு 15.50.000 சதுரகிலோ மீடராகும்

2-ஐரோப்பாவில் 2வது பெரிய ஆறு டான்யுப் ஆகும். இது ஜேர்மனியில் உற்பத்தியாகி 9 நாடுகளுடாகச் சென்று கருங்கடலை அடைகின்றது.

3-உலகின் நிலப்பரப்பில் 2வது பெரியநாடு கனடா(முதலாவது நாடு ரஷ்ஷியா) இதன் பரப்பளவு 9.9 மில்லியன் சதுரகிலோ மீட்டராகும்.

4-உலகின் மிகப்பெரிய தீவு கிறீன்லாந்து இதன் பரப்பு 21.75.600 ச.கி.மீட்டர் இரண்டாவது நியூகெனியா இதன் பரப்பு 7.77.000 ச.கி.மீட்டர்.

5-ரோமானியப் பேரரசின் தலைவர்களான யூலியசீசர், அகஸ்டின்சீசர் ஆகிய இருவருமே இன்று வழக்கிலுள்ள நாட்காட்டி அமைப்பிற்கு முதலில் வித்திட்டவர்கள். யூலை, ஆகஸ்ட் ஆகிய இரு மாதங்களும் இவர்களது பெயரினைக் குறித்து வந்தவையாகும்.

6-கி.மு. 200 ஆண்டுகளுக்கு முன் சீனப்பெரும்சுவர் எதிரிகளிடமிருந்து தமது நாட்டைப் பாதுகாக்கவென பெரும் மனித வலுவின் பிரயோகத்தால் கட்டி எழுப்பப்பட்டது.

7-ரஷ்ஷியா உருவாக்கிய லூனா (Luna) என்ற விண்கலம்தான் முதன் முதல் 1959 ஜனவரி 2ம் திகதி விண்ணிற்கு ஏவப்பட்டு சந்திரனைத் தாண்டி வெற்றிகரமாகப் பறந்து சென்ற விண்கலமாகும்.

8-பிரான்சை ஜேர்மனியிடமிருந்து மீட்க அமெரிக்கா, பிரித்தானியா, பிரெஞ்சுப் படை வீரர்கள் இணைந்து நடாத்திய D.Day தரையிறக்கம் 13.06.1944ல் நிகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூனைக்குட்டி...

மஞ்சள் நிறக்குட்டி
எனது காலை பிராண்டும்
செல்லப்பூனைக் குட்டி
எங்கள் அப்பாவின்
மெத்தை மீது
ஏறிப்படுக்கும் குட்டி
தங்கை பள்ளிபோகும்போது
வழியனுப்பும் செல்லக்குட்டி
அம்மா கற்றுத் தந்த
மியாவ்...மியாவ் மொழியில்
தனக்குத் தெரிந்த கீதம்பாடி
மகிழ வைக்கும் குட்டி
குட்டி இன்பம் கோடி இன்பம்
கூறக் கூறப் பெருகும்
குட்டி ஒன்று வாங்கிப்போய் நீ
வளர்த்தால் உண்மை புரியும்!...

செல்வி எஸ் சானியா
சுண்டுக்குளி மகளீர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

## அன்னை.......

அகிலத்தை அறிய
அத்திவாராமாய்
அமைந்த உறவு அன்னை
ஐம்பெரும் குரவர்களுள்
அதி உயர்வாய் இருப்பவளும்
அதி உயர் அன்னையாவாள்
பத்து மாதம் சுமந்து
பாங்குடனே எமை வளர்த்து
பார் போற்றும் உத்தமராக்கி
பார்த்து ரசிப்பவள் அன்னை
எழுத்துக்களிற்கெல்லாம்
முதலும் மூலமுமாய்
அமைந்த உறவு அன்னை
அகிலத்தைக் காட்டி அன்பை ஊட்டி
ஆளாக்கிய அன்னையை
ஆராதிப்போம் தினம்..தினம்!..

செல்வி.சிறி சுகன்யா
ரூத் மிஷன்
கிளிநொச்சி.

## பொது அறிவு.......

1-கண்டங்களில் பெரியது - ஆசியாக்கண்டம்
2-கடல்களில் பெரியது - பசுபிக்பெருங்கடல்
3-தீவுகளில் பெரியது - கிறீன்லாந்து
4-சிகரங்களில் பெரியது - எவெரெட்ஸ் சிகரம்
5-மலைகளில் பெரியது - இமயமலை
6-ஆறுகளில் பெரியது - அமேசன் ஆறு
9-பாலைவனங்களில் பெரியது - சகாராப் பாலைவனம்
10-நிலப்பரப்பில் நாடுகளில் பெரியது - ரஷ்ஷியா

செல்வி மௌசிகா - மகேந்திரன்
ரூத் மிஷன் - கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சராசரி மனிதனின் தகவல்கள்....

செல்வி எஸ் சானியா
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

-சராசரி மனிதனின் குருதியின் அளவு - 5.5 லீட்டர்.
-மனித உடலில் இருந்து வெளியேறும் சிறுநீரின் அளவு - 1.5 லீட்டர்
-சராசரி மனிதன் ஒருவன் ஒருநளைக்கு அருந்த வேண்டிய நீர் -6லீட்டர்
-மனித உடலிலுள்ள இரத்த நாளங்களின் மொத்த நீளம் - 1 கி.மீட்டர்
-மனித உடலில் மிகவும் குளிரான பகுதி - மூக்கு
-மனித உடலில் வியர்க்காத உறுப்பு - உதடு
-மனித உடலில் சிவப்பு அணுவின் சராசரி ஆயுட்காலம் - 120 நாட்கள்
-இறந்த மனிதனின் இதயத்தின் உயிர்த்துடிப்பு அடங்கும் நேரம் - 20 நிமிடம்
-மனித நகம் வளரும் வருடசராசரி அளவு - 125 அங்குலம்
-மனித உடலிலுள்ள வியர்வைச் சுரப்பிகளின் எண்ணிக்கை - 2 மில்லியன்

## பொது அறிவு......

செல்வி தர்ஷிகா கண்ணன்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

1-லண்டனிலுள்ள மெழுகுச்சிலை மியூசியத்திற்கு என்ன பெயர் - மேடம் ரிச்சட்

2-உலக குத்துச்சண்டைப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் கறுப்பினத்தவரின் பெயர் என்ன - ஜோன் ஆர்தர் ஜோன்சன்.

3-அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கனைச் சுட்டுக்கொன்றவரின் பெயர் என்ன - ஜோன் வில்விஸ் பூத்.

4-விமானங்களின் பயண விவரங்களைப் பதிவு செய்து வைத்திருக்கும் சாதனத்தின் பெயர் என்ன - கறுப்புப்பெட்டி.

5-கொலம்பஸின் கடற் பயணத்திற்கு உதவிய அவரின் சகோதரரின் பெயர் என்ன - பார்த்தலோமியோ.

6-வடதீவு, தென்தீவு என இரண்டு தீவுகளைக் கொண்டிருக்கும் நாடு எது -நியூசிலாந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

கூடாவொழுக்கம்: –

271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

272. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்.

273. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேயந் தற்று.

274. தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

275. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவும் தரும்.

276. நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

277. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து.

278. மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்.

279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
மறைந்தொழுகும் மாந்தர் பலர்.

280. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழிந்து விடின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும் (தீய நடத்தை)

271. வஞ்சகனின் குற்றத்தினைப் பிறர் அறியாவிடினும் அவனது பஞ்சபூதங்களும் அறிந்து தமக்குள் சிரிக்கும்.

272. தன் நெஞ்சறியக் குற்றம் செய்தவன் வானத்தளவு உயர்ந்த பெருமை உடையவனானாலும் எப்பயனும் இல்லை.

273. பசுவானது பிறர் அஞ்சும்படியும் புலித்தோலைப் போர்த்துக்கொண்டு புல்லைத் தின்பதற்கு ஒப்பாகும். வலிமை இல்லாதவன் வலிமை உடையவனாக வேடமிடுதல்.

274. தவவேடம் தரித்துக்கொண்டு தீய செயல்களைச் செய்வது வேடன் புதரில் மறைந்து பறவைகளைப் பிடிப்பதற்கு ஒப்பாகும்.

275. பற்றற்றேன் என்பவரின் வஞ்சக ஒழுக்கம் என் செய்தோம்...என் செய்தோம் என்றுதானே இரங்கும் படியான துன்பத்தைக் கொடுக்கும்.

276. உள்ளத்தால் துறவு கொள்ளாமல் துறவிபோல வஞ்சக வடிவம் கொண்டு வாழ்பவரைவிடக் கொடியவர் வேறு ஒருவரும் இல்லை.

277. செந்நிறக் குன்றிமணியின் மூக்கில் கருநிறம் இருப்பதுபோல வெளியில் நன்னடத்தையும் உள்ளத்தில் வஞ்சனை உடையவரும் இவ்வுலகில் உண்டு.

278. மனத்தினுள் வஞ்சனைகொண்டு சான்றோரின் தன்மையுடையவராய் அவ்வஞ்சனையை மறைக்கும் மக்களும் பலருண்டு.

279. அம்பு நேரானது. அதன் செயல் கொடியது. யாழ் வளைவானது அதன் செயல் இனிமையானது. அதுபோல் ஒருவரை உருவத்தால் அறியாமல் அவரின் செயலால் அறிய வேண்டும்.

280. உலக மக்கள் பழித்த செயலைக் கைவிட்டுவிட்டால் தலைமுடியை வளர்த்தலும் நீக்கலும் ஆகிய செயல்களைச் செய்ய வேண்டியது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்...



## பாய்ச்சல்:-

மரத்தை வெட்டி வீழ்த்திவிட்டுக் கோடரியும் கயிறும் விறகு வெட்டிக்குப் பக்கத்தில் மனம்விட்டுப் பேசிக்கொண்டிருந்தன. காட்டுக்குள் நுழைந்த ஒரு மரங்கொத்திப்பறவை மாறி...மாறி நான்கு மரங்களைத் தன் அலகால் கொத்திவிட்டுப் பறந்து போனது. இந்த மரங்கொத்தியைப் பார்த்தாயா? நான்கு மரங்களை மாறி மாறித் தன் அலகால் வெட்டியது. ஒரு மரத்தையாவது அதனால் உருப்படியாக வீழ்த்த முடிந்ததா?..என்று கயிற்றைப் பார்த்துக் கேட்டது கோடரி. "மரங்கொத்தியால் அது முடியாது" என்றது கயிறு. "ஏன் அப்படிச் சொல்கிறாய்" கயிறு சொன்னது...

"நாலு மரத்தையும் வெட்டுகிறவன்
ஒரு மரத்தையும் விழுத்துவதில்லை"

## முனைப்பு:-

காலைப்பனி கொக்கும் குருவியும் குளிரால் நடுங்கின. தங்களுக்குள்ளேயே பேசி அவை ஒரு முடிவுக்கு வந்தன. "இன்று நான் குளத்துக்குப் போவதில்லை வேண்டுமானால் மீன் இங்கே வரட்டும்" என்றது குருவி. பொழுது கரைந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. நடுப்பகல் தாண்டிய பின்பும் பசியை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும். கொக்கு குளத்துக்குப் போனது. குருவி பழத்துக்குப் போனது. மரத்தில் இருந்த அணில் பாடியது.

"கொக்கைத் தேடிக் குளம் வராது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரின் கவனத்திற்கு...

குழந்தைகள் பொதுவாகவே பெற்றோர்களுக்கு தங்கள் பிள்ளை வகுப்பில் முதல் மாணவனாக வரவேண்டும், தனித்துவம் வாய்ந்தவனாக இருக்க வேண்டும் என்பதுவே ஆசை. இதற்காக எப்போதும் படி, படி என்று சொல்லிக் கொண்டே இருக்க கூடாது, அது அவர்களுக்கு வெறுப்பை மட்டுமே ஏற்படுத்தும். இதற்கு பதிலாக அன்புடன் அரவணைத்து சொல்லிக் கொடுப்பது அவசியம்.

ஒவ்வொரு நாளும் எந்தெந்தப் பாடங்களை படிக்க வேண்டும் என பட்டியலிட்டு, அதற்கேற்றாற் போல் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளை படிக்கச் சொல்லிவிட்டு, நீங்கள் தொலைக்காட்சி பார்க்கக் கூடாது, அப்படி செய்தால் அவர்களுக்கு எதிர்மறையான எண்ணமே ஏற்படும்.

ஒருவேளை சரியாக படிக்கவில்லை என்றால் அதற்காக அவர்களை அடிக்ககூடாது, மதிப்பெண் குறைந்ததற்கு என்ன காரணம் என அலசிக் காரணத்தை கண்டறிந்து அதனைச் சரிசெய்ய வேண்டும்.பெற்றோர்கள் பிள்ளைகளின் ஆசிரியரை அடிக்கடி சந்திக்க வேண்டும், வகுப்பில் பாடங்களை கவனிக்கிறாரா? மற்ற பிள்ளைகளுடன் எப்படி பழகுகின்றார்? என தெரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வப்போது ஓய்வு நேரங்களில் விளையாட அனுமதிக்கலாம்,வார இறுதிநாட்களில் பெற்றோர் ஜாலியாக பிக்னிக் கூட்டி செல்லலாம், இப்படி செய்தால் பிள்ளைகளுக்கு உங்களின் மீதான பாசம் அதிகரிக்கும். உங்கள் பிள்ளைகளுடன் ஒரு நண்பனைப் போன்று நீங்கள் பழகினாலே போதும், உங்கள் எண்ணம் போன்று அவனை சிறந்த மாணவனாக சமூகத்தில் பெரிய ஆளாக உருவாக்கலாம்!!!

-----------------------------

**கல்வி!...**

அறியாமையை அகற்றி
மனங்களைச் செதுக்கி
மனிதனை மனிதனாக்குவது
அழிவற்ற கல்விச் செல்வம்!...

**ஆசிரியர்!...**

உண்மையை ஊட்டி
பொய்மையை அகற்றி
நன்மையே செய் என
வழி காட்டுபவர் ஆசிரியர்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி-157
## (வைகாசி- ஆனி 2017)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ-வ**

01-07 தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்ட இறுதி இடம் இது. (ஒ.எ.வி)
25-28 கவலை துக்கம் எனவும் சொல்லலாம்.
29-31 இந்தப் பிரதேசத்தில் இன்றும் ஏழ்மை நிலவுகின்றது.
38-40 சேவை செய்தவர்களுக்கு இதுவும் வழங்கப்படுவது வழக்கம்.
43-45 பறவை ஒன்று.

**வ-இ**

10-08 அறிவு ஒத்த சொல்லாக வந்துள்ளது.
13-11 சிலர் இதன் உச்சிக்குப் போவதற்குப் படாத பாடுபடுவார்கள்
19-16 அன்பைப் போதித்த உத்தமபிரான்.
21-19 நம் நாட்டில் ஆசிரியரின் கையில் உள்ளது.
25-22 நம் நாட்டில் இன்றும் இது நிலவுவதால் அழிவுதான்.

**கீ-மே**

33-19 இதனால் எதையும் சாதிக்கலாம் என்று சொல்வார்கள்.
37-30 மருத்துவ பானம்.
43-22 மனித குணத்தில் சிலர் இது பிடித்து அலைவர்.
46-25 சிலர் காரியத்தைச் சாதிக்க இதுவும் வைப்பர்.
49-28 வட்டத்தின் அரைப் பங்கு இது.

**மே-கீ**

01-22 சொத்து என்று சொல்வார்கள்.
04-25 யாரும் சிறிய நன்மை செய்தாலும் நாம் இது சொல்ல வேண்டும்.
07-28 கானகம் என்றும் அழைக்கலாம்.
27-48 கலைகளில் ஒன்று.
40-47 பணக்காரனை இப்படியும் அழைப்பார்கள்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையகத்தில் வைகாசி......

கௌசி - ஜேர்மனி




காலத்தின் ஓட்டத்தில், உருண்டு செல்லும் வருடக்கணக்கில், மீண்டும் ஒரு வைகாசி வாழ்க்கையின் பக்கத்தில் வந்து நிற்கின்றது. சென்ற காலங்களை மீட்டிப் பார்க்கும் வேளையிலே அதி அற்புதமான மாதமாய்த் தன்னைக் காட்டி கண் விழிக்க வைக்கின்றது. வைஸ்ணவர்களால் மாதவ மாதம் என்று கருதப்பட்டு சிறப்புப் பெறுகின்றது.

காலங்களை இளவேனிற்காலம், முதுவேனிற்காலம், கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக் காலம் என எம் முன்னோர்கள் பிரித்துப் பார்த்த போது, வைகாசி மாதம் என்பது இளவேனிற்காலமாய்க் காலப்பரப்பில் வசந்தகாலமாய் வளம் காட்டி நிற்கின்றது. பட்டமரங்கள் துளிர்க்கக் காண்கின்றோம். மெல்லிய துளிர்களில் பச்சைப்பசேலென அரும்பி நிற்கும் இலைகளையும், வண்ணக் கோலங்காட்டி புன்னகை வீசும் மலர்க் கொத்துக்களும், வகைவகையாய் அழகு காட்டும் ரூலிப் மலர்களின் வசந்த வருகையும் இக்காலத்தின் சொர்க்கங்கள் அல்லவா!

அதிகூடிய குளிருமில்லை. அதிகூடிய வெப்பமுமில்லை. சில்லென்ற குளிரும் தேவையான வெப்பமும் வளரும் பயிர்களைச் சுறுசுறுப்பாக்கும் காலநிலை. தடிப்பான மேலங்கிகள் பெட்டிகளுள் அடங்க மெல்லிய மேலங்கிகளுக்கு வேலை கொடுக்கத் தொடங்கும் காலம் அல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் புத்துளிர் புனைவது போலவே வாழ்க்கையின் வசந்த பொழுதுகளும் இப் பருவகாலத் தி லேயே முகிழ்கின்றது. திருமணங்கள் இணைந்து சட்டரீதியாக திருமண பந்தத்தில் இணைகின்ற காலங்கள் இவ்வசந்த காலங்களே. "வைகாசி மாதத்தில பந்தல் ஒன்று கட்டி ரெண்டு வாழைமரம் வைக்கப்போறேண்டி" என்ற பாடல் கேட்டிருப்பீர்கள். பொதுவாகவே தமிழர்கள் திருமணநாளை அநேகமாக வைகாசி மாதத்திலே வைப்பது வழக்கமாகப்படுகின்றது. தமிழர்கள் மட்டுமா? ஜேர்மனியர்கள் கூட தமது திருமணநாளை இந்த இளவேனிற்காலத்திலேயே தெரிவுசெய்கின்றனர்.

வாழ்க்கையின் ஆன்மீகப் பற்றுள்ளவர்களுக்குக் கூட இக்காலம் பொற்காலமே. சரவணப் பொய்கையிலே சிவபெருமானுடைய நெற்றியில் இருந்து வந்த தீப்பொறிகளால் தோன்றிய 6 குழந்தைகளை உமையாள் ஒன்றாய்ச் சேர்த்து ஆறுமுகக்கடவுளாய் உருவாக்கிய தினமும் வைகாசி விசாக தினமே ஆகும். அன்புதான் இன்ப ஊற்று என்று உலகத்திற்கே அன்பைப் போதித்து புலாலுண்ணாமையை வலியுறுத்தி, செல்வச்செழிப்பை துச்சமெனக் கருதி வெறுத்து, உலகப்பற்றைத் துறந்து போதிமரத்தடியில் ஞானம் பெற்ற கௌதம புத்தர் நேபாள லும்பினி என்னும் இடத்தில் பிறந்தது இவ்வைகாசி மாதத்து பௌர்ணமி விசாகதினத்திலேயே ஆகும். வைகாசி மாத விசாக தினத்திலேயே. அவர், பிறந்தது, ஞானம் பெற்றது, இறந்தது அனைத்தும் நடைபெற்றுள்ளது.

பொதுவாகவே மேமாதம் என்றவுடன் எம் எண்ணத்தில் முதலில் தோன்றுவது விடுமுறை, தொழிலாளர் தினம். அதுவே எமக்கு மிக அவசியமானது என்பாரும் உண்டு. 18 ஆம் நூற்றாண்டு இறுதியிலும் 19ம் நூற்றாண்டு ஆரம்பப்பகுதியிலும் வளர்ச்சியடைந்த நாடுகளிலிலுள்ள தொழிலாளர்கள் 8 மணிநேரம் வேலை கேட்டு நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தின் விளைவே இன்றைய உலகலாவிய ரீதியில் நடக்கும் மேதினக் கொண்டாட்டமும் அதன் மூலம் எமக்குக் கிடைக்கும் விடுமுறைதினமும் ஆகும். ஆனால், கனடா, அமெரிக்கா செப்டெம்பர் மாத முதல் திங்கட்கிழமையில் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகின்றன. எனவே காலங்களில் அவள் வசந்தம் என கண்ணதாசன் பெண்ணை வர்ணித்துப் பாடிய பெருமை இப்போது புலப்படுகின்றது அல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறகின் பயணம்....

இறகின் பயணம் இதயத்தை
தொலைத்தது
உதயமாய் உள்ளுர உன் காதல்
ஊமையாய் பறந்ததோ!
வானவெளி முன்றலில் நீ
ஆடி ஆடிப் பறக்கையில்
ஆனந்தத்தின் எல்லை
மகிழ்வைத் தொட்டதோ!
விட்டில் பூச்சிகளாய்
விளக்கோடு ஒன்றித்து
வாழ்ந்தோம்
விடை கொடுத்து அன்பே! நீ
விரைவாகப் பறக்கிறாய்
பழந்தமிழ்பேசி பையப் பைய
பண்பாட்டுன் வாழ்ந்தோம்
மயிலிறகாய் தடவிக்கொடுத்தாய்
மனமகிழ்வாய் வாழ்ந்தோம்
இன்று மனமுறிவாய் மேலே
செல்கிறாய்
வான் முட்டும் கவலையுடன்
வான் பார்த்து ஏங்கி
நிற்கும் வஞ்சியிவள்!.....

திருமதி நருளா சிவநாதன்.
ஜேர்மனி

## இசையா மலரா எது மயக்கம் வண்டினமே!

இசையா மலரா எது மயக்கம்
வண்டினமே!
அசையாத பொருளும்
அசைந்திடும்
அற்புத இசையை கண்டிட
ஆனமட்டும் வண்டினம்
கொண்டிடும் காதல் மலரிலே!

மலரின் மகிழ்வும் தேனின் சுரப்பும்
தேடி வண்டைக் கவர்ந்து
காதல் கொள்ள வைத்து
களிப்பேருவகை கொள்ளுமே!

வண்டினம் கேட்டிடும்இசையைவிட
மலரைக்கவர்ந்து தேனைப்பருகிட
மயக்கம் கொண்டிடுமே!
இசையா மலரா எது மயக்கம்
வண்டினமே!
இயற்கையின் படைப்பிற்கு
எத்தனை அதிசயம்
இனிதாய்ப் பார்த்தால் சுகந்தம்
பலவிதம்
இசையால் மயக்கம் தந்தாலும்
தேனால் மயக்கமே உங்களுக்கு!

வண்டுகள் ரீங்காரம் கேட்டு
மலர்கள்
முகையிழந்து விரிந்திடுமே!
மலர்கள் உய்யாரம்
மதுவைக்கண்டு
வண்டுகள் காதல் வசப்படுமே!
உண்டு களித்து உள்ளுர மயங்கி
மலரில் கிடந்து உழன்று
பறந்திடுமே!
இத்தனைக்கும் மயக்கம்
எதுவெனப்பார்த்தால்
உண்டிட்ட தேனே!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டி!....

வழிகாட்டி என்றிடும்
வாய்ப்பிற்குள் பலராய்வலம் வந்து
சிந்தையினை தட்டுகிறார்
பலமாய் உலகிலே எமை
ஈன்ற தாய் தந்தை
முதலாய் உரித்ததாகும்
வாழ்விற்குள் பல்லாயிரத்தோர்-
உறவாய்வழிகாட்டி விழிதிறந்து
பயணிக்க வைத்தோர் வாய்ப்புக்கள்
பலநூறு வாசலினைத்
தட்டும் வருங்கால முனைப்புகளோ
எண்ணங்களாய் சுற்றும் பயமறியா
கன்றுபோல் பருவங்கள்
கரையும் உய்த்தறியா சிந்தைகள்
உபாதையிலே முடியும்
அனுதினமும் நாம் வாழும்
வாழ்க்கையின் புரட்சி எத்தனையோ
செதுக்களின் உளியாற்றும்
உயர்ச்சி அயராத பணிக்குள்ளே
எத்தனையோபேர்கள் ஆக்கிநிற்கும்
வழிகாட்டல் வாழ்க்கையின்வேர்கள்
ஒற்றைக்கால் தூக்கிநிற்கும்
கொக்குப்போல் நாங்கள் உறுமீன்கள்
வரும் வரையும் காத்திருத்தல்
முறையா?வழிகாட்டி தந்தோரின்
வழிமுறையை பற்றிவழிகாட்டி
வாழ்வோமே வரைமுறையை ஆக்கி!.

திருமதி வசந்தா ஜெகதீசன்
ஜேர்மனி

## பாதுகாப்போமா!....

இனத்தின் இதிகாசம்
நாட்டின் நல்வேதம்
ஊரின் மண்வாசம்
உணர்வு கொண்ட பாரம்பரியம்

வனைதல் முறைமைபோல்
வரலாற்றுக் கதைபேசும்
வேரும் விழதுமாய்
வாழ்வின் நெய்தலிலே
வரம்புக்குள் வடம்பிடித்து
காத்திடும் கைங்கரியம்

நோயும் நொடியும்
விட்டகன்று விடைபெற
பட்டறிவுத் திரட்டலிலே
பாதையிட்ட பேரறிவு

தொட்டவிடம் துலங்க வைக்கும்
தொன்மையின் நுண்ணறிவு
காலமகள் கை வரைந்த
காத்திடத்தின் மெய்யறிவு

பாடாய் படுத்துகின்ற
பாடுகளை நிவர்த்திக்க
மூதாதை அறிஞர்கள்
முன்மொழிந்த பாரம்பரியமிது

பாதுகாப்பு எல்லையிட்டு
பாரிலே நிலைக்க வைத்தால்
வேரோடு சாய்க்காத
வெற்றிக்கு வேதாந்தம்
விளைநிலத்து வரலாற்றை
விழதிற்கும் வேராக்கும்!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்பு...

ஊருக்குள் விருட்சமாய்
நின்றிருந்தது அப்பெருமரம்
என்ன மரம் என்று ஆய்வு செய்தனர்.
இலைகளைக் கொய்தும்,
கிளைகளை வெட்டியும் புரியாத
மரமாய்..ஆலமரமோ.. அரசமரமோ
மருதமரமோ..அடுத்தவளவுக்காரருடன்
எல்லைக்கப்பால் இருப்பவரும்
வந்து பார்த்து ஏமாந்து..வேர்களை
வெட்ட முனைந்தனர்..ஆழ வேரூன்றிய
மரத்தை தூர தேசத்தவரும் வந்து
உலுப்பிப் பார்த்தனர்.
வைரம் பாய்ந்த மரத்தை
ஒன்றும் செய்ய முடியாது போயிற்று.
சுற்றுமுள்ள இளைய
செடிகளை அழித்தால்
தானாக அழிந்துவிடும் என்ற
ஆலோசனைக்கேற்ப
மந்திராலோசனையின் பேரில்
இரசாயனங்கள் கொண்டு
அழித்துப் பார்த்தும் ஒன்றும்
செய்யமுடியாது போயிற்று.
வேர்களின் பலம்பற்றி புரிய
ஆரம்பித்திருக்கவேண்டும்.
பேசிக்கொண்டிருந்த மரம்
திடீரென மௌனமாகிவிட–ஆகா
என்ற படி எனி
எல்லாமே நமது..மரமும் அடிமை..
வெற்றிக்களிப்புடன்
ஊரவர்களில் சிலரும்,அயலவர்களும்,
தொடர்பெல்லைக்கப்பால் நின்றவர்களும்
சிரித்தபடி நகர்ந்தனர்..வேர்கள் இன்னும்
உயிர்ப்புடன் இருப்பதை உணராமல்...

## கவிதைகள்.....

இன்று என்னை
கனவு சுமந்து சென்றது.
இடது வலது என நடந்தும்,
பறந்தும்,கிழக்கு மேற்காக,
முன்னர் பேசிய இலக்கியமேடை,
குந்தியிருந்து
நண்பர்களுடன் பேசிய பூங்கா,
புதுமனை புகுவிழா மடலுடன்,
திருமண அழைப்பிதழையும் தந்து
சென்ற எங்கள் பழைய வீடு..
தூரப் பயணக் களைப்புடன் வந்து
இறங்கிய பத்மா டீச்சர்,
பாரதி கவிதைகளுடன்
தோழமையாகி,பின்பொரு நாளில்
உடல் சிதைந்து இறந்து கிடந்த
அம்மன்கோயில் சந்தி..
கிழக்கு வெளிக்கும்
என்று சொன்ன கல்லூரி நண்பன்
காணாமலே போனதாய்
நம்பிக் கண்டுபிடித்த
அவனது மிதிவண்டி கிடந்த
அப்பண்ணைக் கடையடி..
கூவில் கள்ளடித்து
வீடு திரும்பும் வழியில்
வாத்தியாரைக் கண்டு ஒளித்த
மதகு...சைக்கிள் பழகப்போய்
யாரோ அவளின் வீட்டு வேலிக்குள்
விழுந்து வெட்கப்பட்ட அதே வேலி..
எல்லாம்..எல்லாம்
கடந்து, குளிர் எனினும்,
வந்து இறக்கியது முன்னே
நீண்ட நேரமாக எரிந்துகொண்டிருந்தது
என் கவிதைகள் பிணமாக...

முல்லைஅமுதன்-லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தம்!....

பனி துளி இட்ட முத்தம்
மலரின் இதழில் பதிகிறது
ஆதவன் இட்ட ஏழ முத்தம்
வானவில்லாய் வானில் தெரிகிறது
மழை துளி தந்த முத்தங்கள்
மண்ணில் செடியாய்
முளைத்து நிற்கும்
கொஞ்சும் கிளிகள் தரும் முத்தம்
காண்பவர் மனதை கவர்ந்திழுக்கும்
கடல்அலைகள்வந்துதரும் முத்தம்
கரையை மோதி அதிர வைக்கும்
இயற்கையில் கூட முத்தங்கள்
காதலில் எங்கும் யுத்தங்கள்
பெற்றவள் தருவாள் முதல் முத்தம்
அதில்தான் கடவுளின் கருணை
கலந்திருக்கும்
பிள்ளையின் முத்தம்தான்
இனிய முத்தம்
காமம் இல்லாத ஒரு முத்தம்
உண்மை அன்பை உணர்த்தும்
முத்தம் அது தாய் மகனுக்கு
கொடுக்கும் முத்தம் மகன்
தாய்க்கு கொடுக்கும் முத்தமுமே!
காதலின் பின்னே காம முத்தம்
அதுகருவாய் பின்பு
உயிர்த்து நிற்கும்
சத்தமில்லாத முத்தங்கள்
இட்ட போதும்
சத்தமிடும் மழலையாய்
அது வந்து தவழும்
முத்தங்கள் ஆயிரம் கொடுத்தாலும்
முத்தாக ஒரு பிள்ளை வந்து
சொத்தாக எமக்கு நிற்கும் வேளை
அதுவே ஆண்டவனின்
அருள் முத்தம்
எம் வாழ்வில் ஆண்டவன் தரும்
அருள் முத்தம்!...

கவி மீனா
ஜேர்மனி

# தாய் நிலத்தின் தாகம்!..

தாய் நிலத்தின் வெறுந் தரையும்
தனை மறந்த உறக்கம் தரும்
நெருஞ்சி முள் குத்திய பாதமும்
நிமிடத்தில் வலிதனை மறக்கும்

பழஞ்சோறும் பானையில் தண்ணீரும்
பானமாய் உடல் சூடு தணிக்கும்
தென்னை இளநீரும் தெளிந்தகள்ளும்
தெரிந்து பல நோய்க்கு மருந்தாகும்

பனை மரமாம் அந்த கற்பகதருவும்
பழைய பல நினைவுகளை மீட்கும்
திண்ணையும் முற்றத்தில் குந்தும்
தித்திக்கும் மன உணர்வைத் தரும்

முழுமதி நிலவும் மணல் கும்பியும்
மூச்சிழந்த உறவுகளை நினைவூட்டும்
குயிலின் கூவலும் குருவிகளின்
ஓசையும் காலைப்பண்ணாய்
சுருதி சேர்த்துநிற்கும்

கோவில் மணியோசையும்
கோலமிட்ட முற்றமும்
கதிரவனின்வருகையை பறை சாற்றும்
பசுமையான புல்நுனியில் பனித்துளிகள்
பாதங்களை கழவி நீராட்டும்

கோவைப் பழந்தின்ன
கிளிகள் பறந்துவரும்
கோதியே மாம்பழத்தை
அணில்கள் வீழ்திவிடும்
பலாச்சுளை நறுமணமோ
நாசைத் துளைத்துவிடும்
பலகைபோட்டுப் பகிர்ந்துண்ண
பாசங்கள் கூடிவரும்!....

திருமதி கலைவாணி ஏகானந்தராசா
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிச்சம்.....

திருமதி.ஜெயா நடேசன் - ஜேர்மனி

எனது இளமைப் பருவத்து கண்ணீரில் சுகமிருக்கு
கண் திறந்து ஒளியற்ற கனவுகளில் பொருளிருக்கு
அரிவரி வகுப்பின் மண்ணில் "அ" எழுதிய ருசியிருக்கு
கல்வியில் வெளிச்சத்தில் வேம்படி மர நினைவிருக்கு
அரிக்கன் லாம்புகொண்டு அப்பா தேடிவந்த ஞாபகமிருக்கு
மாதா கோவில் மணி ஓசைச் சத்த ஒலியிருக்கு
விடியமுன் உதய வெளிச்சத்தில் ஆலயம் சென்ற வலியிருக்கு
இறைவன் பக்தி இருந்தால் வெளிச்சம் அவனிடம் இருக்கு
மனிதர்கள் இன்று கூட்டுக்குள் வெளிச்சம் தேட இருக்கு
அனுபவங்கள் வழிகாட்ட முன் மாதிரிகை கையிருக்கு
அகல் வெளிச்சம் வீடுகள் ஆலயங்கள் தொங்கியிருக்கு
பகல் வெளிச்சம் பகட்டாக இயற்கையோடு ஒத்திருக்கு
காலைக் கதிரவன் செங்கதிர்களின் ஒளியில் நிறைவிருக்கு
மாலையாகி இருட்டாகித் தூங்க வைத்து மறைந்திருக்கு
எம்வாழ்வில் ஒளியேற்ற வழிகாட்டலில் நிறைவிருக்கு!...

-----------------------------------------

## சிறுகதைப்போட்டி

அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி (அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்) முதற் பரிசு ரூபா 5000/= இரண்டாம் பரிசு: ரூபா 3000/= மூன்றாம் பரிசு: ரூபா 2000/= ஏனைய ஏழு சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.


போட்டிக்கான விதிகள் சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல்வேண்டும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல்வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் "அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி "எனக் குறிப்பிடப்படல்வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி: ஞானம் அலுவலகம் - 3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06. போட்டி முடிவுத் திகதி : 31.05.2017. முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது. -ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படக் கவிதை (மண் இதழ்-182)




அவனியின் போக்கினைஅழிந்திடாக் காப்பரணாய்
அன்னையின் வடிவமாய் அழகியலின் இலக்கணமாய்
சிவனில் பாதியாய் அவன்சிரத்தின் கங்கையாய்
சீலத்தின் ஈரமாய் சிந்தனையின் இலக்கணமாய்
அவனில் சக்தியாய் அகிலத்தின் அன்னைகளாய்
ஆக்கத்தின் வேராய் ஆளுகின்ற ஜோதிகளைஏற்றுவோம்..!

தவநிலையில் கிடைக்காததரமுயர்வரங்களாய்
தாளாதுஅகிலத்தைதாங்கிடுகின்றகரங்களாய்
இவனின் கவிதைக்குஎடுத்தநல்பாடுபொருளாய்
இலங்கிடும் பெண்மைஇசைக்கின்றசுரங்களாய்
பவனியாய் வருகின்றபங்குனியின் எட்டாம்நாளில்
பரவசத்தில் துள்ளும் பாங்கியரின் கூட்டத்தைப் பாராட்டுவோம்..!

கவனிக்கப்படவேண்டியகண்ணின் இருவிழிகளாய்
காதலெனும் உணர்வின் கலங்கரைவிளக்குகளாய்
நவநிதிகளைக் குவிந்திடும் நல்மணிக் கரங்களாய்
நாநிலஅமைதியைநாடுகின்றபெருவரங்காளய்
துவண்டிடாதநெஞ்சத்துதுணையானதோழிகளாய்
தூர்ந்திடாஞானத்தைதுளிர்க்கின்றதளிர்களைபோற்றுபோம்..!

கவனத்தைஈர்த்திடுகின்றஎம்கற்பகதருக்களாய்
காலகாலமாய் பொழியும் காமதேனுவின் தேற்றமாய்
புவனத்தைநனைக்கின்றபுண்ணியநதிகளாய்
பூக்களினுள் உறங்கியிருக்கும்புதுநறுந்தேனாய்
சுபநிலையைஅடைந்திடச் சூழ்ந்திடும் சாந்தியாய்
சுகங்களைத் தந்திடுகின்றசுந்தரதேவிகளைவாழ்த்துவோம்.!

அம்பலவன்புவனேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சினைப் பொசுக்கும் நினைவலைகள்....

நெஞ்சினைப் பொசுக்கும் நினைவலைகள் நேரில் வருகின்றது
நீள்கடல் கொஞ்சும் நித்திலம் எந்தன்நிழலையும் சுடுகின்றது
வஞ்சகம் செய்தவக்கற்ற அரசோவாதங்கள் புரிகிறது
வாழ்வைச் சிதைத்து வளங்களைப்பறித்த வன்மம்வலிக்கிறது

கஞ்சிக்குமின்றிகதறிடும் உறவுகள் கண்ணீரில் மிதக்குதம்மா
காலங்கள் துளிர்த்து கண்ணீரைத்துடைக்கக் கரங்கள்நீளுமா
பிஞ்சுகாய் பூக்களைப்பிடுங்கிப் புழுதியில்போட்டு மிதித்தம்மா
பிரளயம் மண்ணில் போரென்றபேரில் பேயெனஅடித்ததம்மா

ஏஞ்சியநாட்களில் எதிர்த்திடும் சக்தி எதிரிக்கு இல்லையம்மா
எல்லையைமறித்து இரசாயவாயுவை இராணுவம் விதைத்தம்மா
வெஞ்சமரில் குதித்து வேள்விகள் செய்தவர் வீரம் மறைகிறதே
வீதிக்குவீதி வீணரின்படைகள் வெற்றியாய் உரைக்கின்றதே

பஞ்சினுமனைய பாலகர்முகங்கள் பார்வையில் கரைகிறதே
பசியும் துயிலும் பட்டெனப்பறந்து மனம் பதறியழகின்றதே
கெஞ்சிக்கேட்டால் கேவலமாய் பிச்சைகேட்டிட மறுக்கிறதே
கேள்விகளெல்லாமே வேள்விகளாகிக் காலம் கரைகின்றதே

துஞ்சியநிலையில் துயர்வந்து சூழ்ந்துதுவம்சம் ஆடியதே
தொட்டிடத் தடையாம் இரசாயனக்குண்டுதீயாய் இறங்கியதே
அஞ்சிடாது காத்த அத்தனைவீரரின் ஆன்மாக்கள் பதறியதே
அழிப்பது ஒன்றே இலக்கெனக்கொண்ட அரசுகள் ஆளுகிறதே

குஞ்சுகளைக்கொன்று கூடுகளைப் பிய்த்தகுற்றம் தெரியலைா.?
கொலைகள் புரிந்த கொள்ளையரின் கொடுமைக்கு நீதியிலையா?
விஞ்சியபடையணி வன்புணர்வு புரிந்தவாக்குகள் பொய்த்திடுமா?
விதவைகள் அனாதைகள் விடிவியின்றி வீதியில் நிற்பதுவோ?

--அம்பலவன்புவனேந்திரன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையை நாடி!...

(மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூறி இரந்தழைப்பார் யாவருமங்கில்லை) - ஔவையார் பாடல் இது.

இதுபோல்தான் பணம் பதவி படைத்தவரை சுற்றி ஒரு கூட்டம் முன்னும் பின்னும் கைகட்டி, மரியாதை செய்தபடி அடியாட்களை ப்போலே கேட்காமலே வந்து கூடுவர், தேனை நக்கும் எறும்புகள் போலே மொய்க்கும் மனிதர்கள் தம் தேவையை நாடி திரியும் சுயநலமான மனிதர்கள் தம் தேவைகள் பூர்த்தியானதும் பறக்கும் ஒரு காக்கைக் கூட்டமே! காய்க்கின்ற மரத்துக்கே கல்லடி அதிகம் என்பது போலே உதவும் கரங்களுக்கே உபத்திரவமும் அதிகம், பிச்சை கொடுப்பவன் வீட்டு வாசலிலேதான் பிச்சை காரனும் சத்தம் போட்டு பிச்சை கேட்பான் பிச்சை எடுத்து முடிய குப்பையை வேற்று வாசலில் கொட்டி போட்டு போகிறான், என்றும் கொடுப்பவனுக்கும் உதவி செய்பவனுக்கும் தானே துன்பம்.

நாட்டுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று காந்தி பட்ட பாடு உலகிற்கே தெரியும், உணவின்றி, உடையின்றி தன் வாழ்வை மறந்து சுதந்திரம் வாங்கிக் கொடுத்த காந்திக்கு நன்றி சொன்னவர்கள் எத்தனை பேரு? அவரை சுட்டு விழ்த்தி நன்றியை சொன்னதும் அந்த நாட்டில் ஒரு மனித சாதிதானே? மற்றவர்களுக்காகப் பாடு பட்டவனுக்கு பரிகாரம் கொலை என்று பழக்கப்பட்ட மனிதர்கள் வாழும் நாட்டிலே நாம் நன்றியை எதிர்பார்த்து வாழவே முடியாது பாருங்கோ! கையை நீட்டி உதவிகள் கேட்கும் போது எளிய மனிதர்கள் போலே தெரியும் இவர்கள் எமக்கு ஒரு துன்பம் என்றால் கை கொடுத்து உதவ முன்வருவதில்லை, விழுந்தவனைத் தூக்கி விட கைகள் நீள்வதில்லை ஏறி மிதிக்க கால்கள் மட்டும் ஓடி வரும் இதுதான் இங்கு வந்த பல தமிழர் குணம்

எள்ளி நகையாடி தமது எளிய குணத்தை காட்டுவதில் பெருமை கொள்கிறான் இந்த எளிய மனிதன். வாங்க மட்டும் கை நீளக்கூடாது கொடுப்பதற்கும் உதவுவதற்கும் கைகள் நீள வேணும் என்பதை அறியாத மூடர்கள் அள்ளி அள்ளித் தன் வாயிலேயே போட்டுக் கொண்டிருப்பார்கள் அடுத்தவன் வாய்க்கும் ஒரு கவளம் சோறு கொடுக்க மனம் இருந்தால் அவனே உண்மையில் மனச்சாட்சி உள்ள மனிதனாகின்றான்

நாட்டில் அடைக்கலம் தந்து, வசிக்க வீடு தந்து, உண்ண உடுக்க பணமும் தந்து இங்கு வாழ வழிகாட்டும் இந்த ஜேர்மன் நாட்டு மக்களை பாருங்கள், அன்பு காட்டி ஆதரவு அழிக்கும் இந்த இனத்தை பார்த்தாவது சில ஜென்மங்கள் திருந்த வேண்டும், இதை எடுத்துச் சொன்னால் சிலஅறிவிலிகள் சொல்லுதுகள் அவங்கள் எங்களுக்குத் தரத்தானே வேணும் என்று, என்னமோ இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமுன்பு கொடுத்து வைத்து விட்டு வந்த மாதிரி இருக்கு இவர்களது பேச்சு!
ஊரிலை பாத்தி நட்டு ஏரு பிடித்தவர்களுக்குக் கூட மரியாதை கொடுக்கலாம் ஆனால் அங்கு பள்ளிப்பக்கம் மழைக்குக் கூட ஒதுங்காமல் வெள்ளத்தில் அள்ளுப்பட்டு வந்த குப்பைகள் போலே சில அறிவிலிகளும் சேர்ந்து இங்கு வந்து தமிழரின் மானம் மரியாதை ஒற்றுமைகளை குலைக்குதுகள் பாருங்கோ!

இதுகளை இங்கு அரசாங்கம் பிச்சைச் காசை கொடுத்து சம உரிமை கொடுத்து விட்டதாலே அப்படி பட்டவர்கள் தலைக் கனம் பிடித்து ஆடுதுகள், தலைகால் புரியாமல் பேசுதுகள் இப்படிப்பட்ட மனிதர்களுக்கு உதவி செய்து முன்னுக்குக் கொண்டு வந்தவர்களுக்கே முதுகுக்குப் பின்னாலே கத்தியாலே குத்த மட்டும் தெரிந்த இவர்கள்தான் தேவையை நாடி ஓடி வரும் சுயநலவாதிகள்.

மனித நேயமற்ற, நன்றி உணர்வு இல்லா, ஒற்றுமையே இல்லாத, நெஞ்சில் எரிச்சலும், புகைச்சலும், பழி வாங்கும் நோக்கமும் கொண்ட உதவும் மனபோக்கு அற்ற இந்தச் சுயநலவாதிகளுக்கு பேரு தமிழர் பாருங்கோ!
இப்ப புரியுதா? நமக்கு ஏன் நாடு இல்லை என்று?.....

கவி மீனா - ஜேர்மனி

---------------------

# ஐந்து பெற்றால்!...

ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி என்பது ஐந்து பெண் மக்களைப் பெறுவதைக் குறிப்பதாக கூறுவார்கள். ஆனால், அது உண்மையல்ல. அப்படியென்றால் எது உண்மை, வாங்க தெரிந்துகொள்வோம்.

1. ஆடம்பரமாய் வாழும் தாய்
2. பொறுப்பில்லாமல் வாழும் தந்தை
3. ஒழுக்கமற்ற மனைவி
4. ஏமாற்றுவதும் துரோகமும் செய்யக்கூடிய உடன் பிறப்புகள்
5. சொல் பேச்சு கேளாத பிடிவாதமுடைய பிள்ளைகள்

ஆகிய ஐந்தும் இருந்தாலே போதும். அவன் அரசனகாவே இருந்தாலும், கூட அவனது வாழ்க்கையே அழிவை நோக்கி போகும் என்பது தான் உண்மையான பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்.....

ப.பசுபதிராசா-ஜேர்மனி

என்னைப்பொறுத்த அளவில் இலங்கைத் தமிழர்களின் போராட்டம் என்பது 1970 களில் பெரிதும் வளர்ச்சியும் எழுச்சியும் படிப்பும் பயனுமாய் உயர்ச்சி அடைந்துகொண்டிருந்த வடக்கு குறிப்பாக வன்னி மற்றும் கிழக்கு மாகாண இளைஞர்களின் மறுமலர்ச்சியை உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தின் மாறுபாடுகளைக்கண்டு அஞ்சிய யாழ்ப்பாண மேட்டுக்குடித் தமிழ்ச் சந்தர்ப்பவாத அரசியல் தலைமைகள் அவர்களின் எழுச்சியை மடைமாற்றம் செய்து முற்றாக அழித்தொழித்த தந்திரோபாய நடவடிக்கைகளே முள்ளிவாய்க்காலில் முடிந்த இனஅழிப்பாக எழுந்த வர்க்க அழிவு.

இந்தக் குற்றச்சாட்டின் உண்மையையே போர் தின்று முடித்து வன்னி மற்றும் கிழக்கு மாவட்டங்களுக்கான பாராமுகமும் உள்நாட்டு வெளிநாட்டு என்று உதவிகள் ஏராளமாக நீண்டும் அவ்வுதவிகள் யாவும் யாழ்ப்பாண வெளிநாட்டு இடைத்தரகர்களால் பெரிதும் பாதிப்புற்றவர்களுக்கு மறைத்தளிக்கப்பட்ட சம்பவங்கள் வர்க்க நலன்களின் வாஞ்சையே. வன்னி மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட சில லட்சம்பேர்களை உயர்ந்து ஓங்கி நிற்கும் பல லட்சம் பேர்களால் வெளிநாட்டு ஆட்களால் நிவர்த்தி காணமுடியாமல் ஏழ வருடங்களாகத் தொடரும் நெருக்கடிகளுக்குக் காரணம் இம்மக்கள் மீது காலா காலமாய் பதிந்த காட்புணர்ச்சியே.

மக்களில் பணக்காரர்களுக்கு சமூகத்தைப்பற்றிய பங்களிப்பில் எப்போதும் அதிகார மட்டங்களைக் கைப்பற்றுவதே அன்றாடக் கவலை. ஏழைககளுக்கு ஒருவேளை உணவாவது கிடைத்தால் சரி என்ற கவலை. ஆனால் இந்த இரண்டுபேருக்கும் இடையில் தத்தளிக்கும் மத்தியவர்க்கத்தினரே அன்றாட அரசியல்மீது சமூக அசைவுகள் மீதும் பாதிப்பைக் கூர்ந்து கவனித்து அரசாங்கத்தை ஆட்டிப்படைப்பவர்கள் அப்படிப்பட்ட வன்னி மற்றும் கிழக்கு மக்களை எழுச்சி காணவிடாது திட்டமிட்டு இருபெரும் ஆதிக்க வர்க்கத்தார்களின் அழித்தொழிக்கும் மந்திர பேதம்தான் தமிழீழ விடுதலை என்ற மாயமான். விடுதலைப் போராட்டம் நடந்துவந்த திசைகளில் மீது அசைவு வைத்தால் இந்த நாசகாரம் புரியும்

ஒருசிறு நிலப்பரப்புக்குள் நின்றுகொண்டு மிகச்சொற்ப படைப்பலத்தையும் பாரிய மக்கள் எதிர்ப்பையும் பெரும் பொருளாதாரத் தடைகளையும் உணரும் தலைவன் அரசியலில் ஏதாவது மாற்றுச் சிந்தனை பற்றியும் எதிர்கால நிலமைகள் குறித்தும் கவனம் செலுத்தாமல் மக்கள் மோசடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் செய்யும் தமிழ்ப்பூர்ஷ ாவாக நாடாளுமன்ற தலையாட்டிப் பொம்மைகளினதும் ஆமாம் சாமிப் போக்கினையும் முடிக்குரிய மூலோபாயமாகக்கொண்டு தமிழீழக் கற்பனைக்கனவில் மிதந்ததற்குக் காரணம் பெரிதும் அழிவைத் தடுக்க அரணாக வைக்கப்பட்ட உழைக்கும் பாட்டாளி ஏழை மக்கள் நசுக்கப்பட வேண்டும் என்ற வர்க்க சிந்தனையல்லாது வேறு ஏது?.

ப ண க ் கா ர ர் க ளா க பதவிக்காரர்களாக இருந்தால் ஆயுதம் தூக்க வேண்டியதில்லை உயர் சாதியாக இருந்தால் ஆராதிக்கப்பட வேண்டியவர் ஆயுதம் அவர்களுக்குத் தீட்டு. ஆனால் ஏழைகளைக் கட்டிவைத்து அடித்து தம் வளம் பெருக்கும் செயல்மட்டும் விடுதலைப் போராளிகளுக்குப் புரியாமல் போனதும் எப்படி. ஆபத்தும் அவசரமும் வரும்போது மட்டும் கந்தனும் கடம்பனும் போராளியாகிச் சிங்களத்தை எதிர்க்க வேண்டும். ஆனால் நம்பினார்களின் கூப்பிட்ட குரலுக்கு உரலாக இடிபடவேண்டும் என்ற நிலையிலும் உயர் வர்க்கம் வாழ வழிவகுத்துக் கொடுத்து வீழ்ந்ததுதான் பாட்டாளி வர்க்கம்.

இந்த விடுதலைப்போர் முடிந்து மே பத்தொன்பதாம் திகதி ஏழ வருடங்கள் முடிவடைந்தாலும் ஏழை பாடடாளி மக்களின் ஏழரைச்சனியன் இன்னும் விட்டபாடில்லை. எனினும் சிங்கள அரசுகள் போராட்டம் தங்களுக்கு எதிர் என்றாகிய போதும் இப்பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை மறுவாழ்வு கொடுத்துவருவது மதிப்பிற்குரிய நாகரீகம். ஆனால் எமக்காகப் போராடிய போராளிகளின் மறுவாழ்விற்கு கல்லறைகள்கூட இல்லை என்பது மாத்திரமல்ல இவர்களை விரோதிகளாகப் பார்க்கும் மனோபாவம் உறவுகளுக்குச் செய்யும் இரத்தத்துரோகம்.

இப்போராட்ட உணர்வுகள்கூட மாபெரும் விடுதலையின் தேவை அறிந்த சேவையாக இராது சிங்களவனை அழிக்கவேண்டும் என்று எம் இரத்த அணுக்களுக்குள் இருக்கும் பரம்பரை அவர்களின் ஆட்டிப்படைப்பில் எழுந்த உணர்ச்சிக்குரல் உரிமைக்குரல் அல்ல. சிங்கள மேட்டுக்குடிகளின் கைகளில் இருக்கும் அரச இயந்திரம் எப்போதும் சிங்கள உழைக்கும் பாட்டாளி வர்க்கக்கட்டமைப்பைக் குண்டுபோட்டுத் தகர்க்கும் சம நேரத்தில் என்றுமே நியாயம் பெரிதாக இராத தமிழர்களின் சுயநிர்ணய கோலங்களைத் திரிதூண்டி ஒடுக்கப்பட்ட மக்களை அழிக்கும் அத்தியாயம் தொடரப்போகிறது. கற்ற பாடத்திலிருந்து இனிமேல் தமிழ், தமிழ்த்தேசியம், தனிநாடு என்ற சொற்களை மறந்தால்தான் பாட்டாளி மக்களுக்கு நிம்தியும் பொன்மதியும் தோன்றும்.

இன்று ஆயிரக்கணக்கில் மறுவாழ்வு பெற்ற போராளிகள் தாங்கள் வஞ்சிக்கப்பட்டதை நினைத்து விடுதலைப் போரையும் இனிமேல் எழும் சுயநிர்ணயக் கோட்பாடுகளையும் காட்டிக்கொடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். இந்த அரசு நினைத்தால் இத்தகைய மறுவாழ்வளிக்கப்பட்ட போராளிகளின் மனவிரக்திகளுக்கு மருந்துபோட்டுப் புனுகு தடவித் தங்கள் மீதான கறைகளைக் கழுவமுடியும் ஆனால் நான் அறிந்தவரை ஏழைப் போராளிகள் தாங்கள் பாதிப்புக்குள்ளானாலும் காட்டிக்கொடுக்க முன்வராதது கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே.. சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்ற இதயச்சிந்தனைக்கு நாம் தாள் வணங்க வேண்டும்.

ஆனால் எங்களின் வாழ்வுகள் எல்லாம் அழிந்து சின்னாபின்னமாய் ஆக எம் முழு முதல் எதிரி சிங்களவனல்ல. நீண்டகாலமாக ஏழை ஒடுக்கப்பட்ட மக்களின் ஜனநாயக உரிமையான வாக்கு வாகனங்களில் ஏறிநின்று செவியைக் கடிக்கும் மக்கள் விரோத மோசடித் தமிழர்களின் பிரதிநிதிகளின் அதகளத்தையும் அக்கப்போரையும்தான் நாம் கட்டாயமாக இனங்காண வேண்டும்.

இந்த ஒடுக்கப்பட்ட உழைக்கும் சமூகம் அக்கினிக்கு இரையாகும் போது கொழும்பு மாடி வீடுகளில் தொலைக்காட்சித் தொடர்களைப் பார்த்துவிட்டு அக்கினி மழை விட்டதும் நாங்கள்தான் வன்னி மக்களின் கண்ணீரைத் துடைக்கப் போகிறோம், உங்கள் வாக்குகளை எங்களுக்கே தந்து பரம்பரை பரம்பரையாக நாங்கள் உழைக்கும் வர்க்கமாகிய உங்களை அழிக்கும் தொடர் நிகழ்வுகளுக்கு மறைமுக ஆதரவு கேட்டு இன்னமும் ஆணி பிடுங்கும் மறைமுக வேலைகள் தொடர்கின்றன.

ஆனால் இரத்தமும் சதையும் பிய்ந்து தொங்கும் எங்கள் வன்னி மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு ஒரு துரும்புகூட எடுத்துப் போடாத இந்தத் துரோகக் கும்பல் முதல் நிராகரிக்கப்பட வேண்டும். அரசியலைச் செய்ய எங்களை விடவேறு எவர்தான் உண்டு என்ற மமதை அறிவியலால் உழைக்கும் வர்க்கம் உயராத போதும் தம் பிரச்சனைகளுக்கு வழிகாண இன்னோர் இந்தச்சாதி ஆதிக்க இரத்தம் உறுஞ்சும் அட்டைகளின் பதவி வேட்கைகளை நாம் அசட்டை செய்ய முடியாது. அந்த நச்சுக் காடுகளின் வஞ்சக வலைகளில் அகப்பட்டு அழியும் தொடர்கதைதான் எங்கள் வாழ்க்கையின் வனதி. ஏமாற்றுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுவதே எங்கள் ஆயிரம் வாசல் இதயம்.

எனக்கு எப்போதும் இருக்கின்ற ஐயப்பாடு என்னவெனில் சிங்கள அரசபொறிமுறைகள் சாதாரண தமிழ்மகன் எந்த அரசியல்த் தொடர்புடையவன் அல்லன் என்றாலும் அவன் தமிழன் என்பதற்காக அவன்மீது உரிமை மீறல்களை நடாத்தும். ஆனால் இந்த அப்பாவிப் பொதுமகனுக்குத் தமிழீழ ஆசைகாட்டி இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லி அவனை நட்டாற்றில் விட்டுவிட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் எழை ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்குகளால் பாராளுமன்ற குசன் கதிரைகளையும் உல்லாச வாகனங்களையும் பாமர மக்களைக் காட்டிக்கொடுத்ததன் பரிசாகப் பெற்றுதம் வர்க்க நலன்களை நிறைவேற்றிக் கொள்வர். ஆனால் இந்தப் பயங்கரவாதச் சிந்தனைகளை மக்களுக்குள் திணித்தவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள்தான் என்ற உண்மையை உணராது இரண்டு வர்க்கமும் உழைக்கும் பிழைக்கும் மக்களை அழிப்பதன் உள்நோக்கம் இதுதான்.

வாழ்ந்தால் அனைவரும் வாழ்ந்திருக்க வேண்டும். வீழ்ந்தால் அனைவரும் வீழ்ந்திருக்க வேண்டும் என்பதுதானே போராட்டப் பூர்வீகம். ஆனால் தரப்படுத்தலால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாணவர்களுக்காய் வன்னி மற்றும் கிழக்கு மாகாண மாணவர்களின் பல்கலைக்கழக ஒதுக்கீட்டை யாழ் மாவட்ட மாணவர்கள் கபளீகரம் செய்ததுடன் யாழ்ப்பாண மக்கள் சிங்களத் தரப்படுத்தலுக்கு எதிரான எழுச்சியையும் வன்னி மற்றும் கிழக்கு மகாண மாணவர்களின் தோளில் இறக்க வைத்துவிட்டு வெளிநாடுகளுக்கு திரைகடல் தேடித்திரவியம் தேடப்புறப்பட்ட செயல் அக்கிரமமானது.

ஆக உழைக்கும் வர்க்கத்தை எப்போதும் விழுங்கும் செயல்களில் ஒன்றுதான் ஈழவிடுதலைப்போர். ஆனால் உழைக்கும் மக்கள் இந்த மக்கள் விரோதக் கும்பலின் பிடிகளுக்குள் இருந்து எம் தலைவிதியினை நாமே நிர்ணயித்துப் போராடும் கட்டமைப்பையும் கூட்டமைப்பையும் பெறவேண்டும். அந்த வகையில் இந்தக் கும்பல்களை நம்பாது இன்று வன்னிமக்கள் தாமே எழுந்து போராடும் நிலமையும் போராடி வெற்றிகொள்ளும் மனப்பலமும் கொண்டு எழுவதை கேப்பாபுலவு மக்களின் ஆரம்ப அடி என்பதை உணர்ந்து அந்த அக்கினியிலிருந்து எழும் பீனிக் பறவைகளாய் எம் உரிமைகளுக்காகப் பரந்த உலகினை நோக்கிச் சிறகை விரிப்போம். வெற்றி ஓர் நாள் வானைத் தட்டும்!...

-------------------

## அறிந்துகொள்வோம்

உலகில் அதிக எழுத்துக்கள் கொண்ட மொழி தமிழாகும்..

| | | |
|---|---|---|
| 01-தமிழ் | -247 | எழுத்துக்கள் |
| 02-சீனம் | -214 | ” |
| 03-சமஸ்கிருதம் | -48 | ” |
| 04-பாரசீகம் | - 31 | ” |
| 05-அரபி | - 28 | ” |
| 06-ஸ்பானிஷ் | - 27 | ” |
| 07-ஜேர்மனி | - 56 | ” |
| 08-ஆங்கிலம் | - 26 | ” |
| 09-கிரேக்கம் | - 24 | ” |
| 10-துருக்கி | - 28 | ” |
| 11-லத்தீன் | - 22 | ” |
| 12-இத்தாலி | - 20 | ” |
| 13-ஹவாய் | - 12 | ” |

தகவல் ஜெயா நடேசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகுநாதன் என்னும் இலட்சிய நடிகர்.........

## தெய்வம் தந்த கலைஞன் ஏ.ரகுநாதன்....

(வண்ணைத்தெய்வம் -பிரான்ஸ்)



காலத்தின் ஓட்டத்தில் நாகரீகத்தின் வளர்ச்சியில் பண்பாட்டின் மலர்ச்சியில்மலர்ந்ததுதான் கலை! அந்தக் கலைக்குள்த்தான் எத்தனை பிரிவுகள்?! எங்கள் ரகுநாதன் அவர்கள் அந்தக் கலைக்குள் உள்ள பல பிரிவுகளை தன்னகத்தே கொண்டவர். எழுத்து, நடிப்பு, இயக்கம்,நாட்டுக்கூத்து, அரச நாடகம், சமூக நாடகம், சினிமா, குறும்படம், இப்படியாக அகவை எண்பதைத் தாண்டிய பின்னரும் கலைத்தாகம் தணியாத ஒரு மனிதராகவே வாழ்ந்து வருகின்றார்.

"கலையரசு" சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் வாரிசான இவர் மலேசியாவில் பிறந்தவர். பூர்வீகம் யாழ்ப்பாணம் மானிப்பாய். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் கல்லூரி நாடகங்களில் நடிக்கத்தொடங்கியபோது ஏற்பட்ட கலை ஆர்வம் இன்று கலைக்காக தன்னையே அர்ப்பணிக்கும் அளவிற்கு தனது வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

'கலையரசு' ஐயா அவர்களின் இயக்கத்தில் தன்னை வளப்படுத்திக்கொண்ட இவர். பின்னர் கலைதத்துறையினரால் 'சானா' என அழைக்கப்பட்ட சண்முகநாதன், ரொசோரியோ பீரிஸ், சுஹைர் கமீட், "நடிகவேள்" லடீஸ் வீரமணி, ஆகிய பிரபல இயக்குனர்களின் இயக்கங்களில் எல்லாம் நடித்திருக்கின்றார். இவர் நடித்த தேரோட்டி மகன், வேதாளம் சொன்ன கதை, ரகுபதி ராகவ ராஜாராம், பச்சைக்கிளியே பழம் கொண்டா, வாடகை அறை, நகரத்துக் கோமாளிகள், அவளைக் கொன்றவள் நீ, போன்ற நாடகங்கள் மிகவும் புகழ்பெற்றவை.

நாடகத்துறை வளரவேண்டும். நல்ல நாடகங்களை மேடையேற்றவேண்டும். என்ற பேரார்வத்தினால் தனது 'நிழல்' நாடகமன்றத்தின் மூலமாக 1968ல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் தொடர்ந்து ஏழு நாட்களும் யாழ்ப்பாணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரசிங்கம் மண்டபத்தில் ஐந்து நாட்களும் 'நிழல் நாடக விழா'வினை நடாத்தி சாதனை படைத்தவர் நாடக வளர்ச்சிக்காகவே நிழல் என்ற பத்திரிகையும் நடாத்தியுள்ளார்.
ஈழத்திருநாட்டில் சிங்களத் திரைப்படங்கள் சர்வதேச தரத்தை எட்டிப்பிடிந்திருந்த போதும் தமிழ்ப் படங்கள் தமிழ்நாட்டில் இருந்தே இறக்குமதியாகிக் கொண்டிருந்த காலத்தில் ஈழத்து தமிழ்க்கலைஞர்களால் உருவாக்கப்பட்ட தோட்டக்காரி' என்ற திரைப்படம் அரங்குகளுக்கு வந்தது. ஆனால் ரசிகர்களுக்கு நம்பிக்கையைத் தரவில்லை. அடுத்து வந்தது 'கடமையின் எல்லை' அந்தப் படத்தில் எங்கள் ரகுநாதன் அவர்களும் நடித்திருந்தார். இது ஓரளவுதான் நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஈழத் தமிழர்களாலும் தரமான திரைப்படங்களைத் தயாரிக்க முடியும் என்னும் கலை வெறியோடு தனது சொத்துக்களை விற்று ரகுநாதன் அவர்கள் உருவாக்கிய திரைப்படம்தான். "நிர்மலா". இந்தத் திரைப்படம் ரசிகர்களுக்கு நம்பிக்கையைத் தந்து பெரு வெற்றியைத் தந்தது.

"நிர்மலா" திரைப்படத்தின் தயாரிப்பாளராக இருந்தபோதும் தனக்காக கதாநாயகன் பாத்திரத்தை தேர்வு செய்யாமல் ஒரு கௌரவ பாத்திரத்திலேயே நடித்திருந்த இவர் பின்னர் "தெய்வம் தந்த வீடு" என்ற படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவராக இருந்ததுடன் அந்தப் படத்தில் ஒரு முக்கிய பாத்திரமான நாதஸ்வரக் கலைஞனாக மிகச் சிறப்பாக நடித்திருந்தார். இந்தப் படத்திற்கு உள்ள சிறப்புகள் என்னவென்றால் காலஞ்சென்ற பிரபல நாதஸ்வர மேதை என்.கே. பத்மநாதன் அவர்கள் இவருக்காக பின்னணி நாதஸ்வரம் வாசித்துள்ளார். காலம் சென்ற பல்துறைக் கலைஞர் திருமிகு இணுவில் வீரமணி ஐயர் அவர்கள் பாடல்களை எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்தின் பிரபல இசைக் கலைஞர் திரு. கண்ணன் அவர்கள் இசையமைத்துள்ளார் அது மாத்திரமல்ல இலங்கையில் தயாரான முதல் சினிமாஸ்க்கோப் திரைப்படம் தெய்வம் தந்த வீடுதான்! அதற்குப் பின்னர்தான் சிங்களத் திரைப்படங்களே சினிமாஸ்கோப்பில் வெளிவந்தன.

'நிர்மலா' திரைப்படத்தில் 'நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் மயான காண்டத்தில் ஒரு சிறு பகுதியைச் சேர்த்து நடிகமணியை நடிக்கவைத்ததுபோல 'தெய்வம் தந்த வீடு' படத்தில் 'நாட்டுக்கூத்துச் சக்கரவர்த்தி 'பூந்தான் யோசேப்பு அவர்களின் ஒரு நாட்டுகூத்தின் சிறு பகுதியைச் சேர்த்து அவரையும் நடிக்கவைத்ததோடு 'கலையரசு' சொர்ணலிங்கம் ஐயா அவர்களையும் நடிக்கவைத்து அவர்களைக் கௌரவப் படுத்தியுள்ளார். பல சிங்களப் படங்களுக்கு திரைக்குப் பின்னால் இருந்து பணியாற்றிய அனுபவம் கொண்ட இவர் இலங்கை இந்திய கூட்டுத்தயாரிப்பான 'நெஞ்சுக்கு நீதி' என்ற படத்திலும் நடித்திருக்கின்றார் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்தில் தானே ஒரு திரைப்படக் கதையை எழுதி அதில் நடிகர் சிவகுமாரையும் நடிகை லஷ்மியையும் நடிக்கவைப்பதற்கான முயற்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டிருந்தார்! அம்முயற்சி கைகூடாமல்ப் போகவே அந்தக் கதையை ஒரு குறுநாவலாக எழுதி "எனக்காகப் பூக்கும்" என்ற பெயரில் வெளியிட்டார்.

காலம் இவரை வெளிநாட்டிற்கு அழைக்க பாரீஸ் வந்த இந்தக கலைஞருக்கு தீனிபோட முதலில் முன்வந்தார் பிரபல அறிவிப்பாளர் எஸ்.கே. ராஜன் அவர்கள். ஆம் 1994ல் ராஜன் ஆவர்கள் தயாரிக்க ரகுநாதன் அவர்களது இயக்கத்தில் வெளியானது 'இன்னும் ஒரு பெண்' என்னும் திரைப்படம். அதே ஆண்டு இலங்கை வானொலியில் 268 வாரங்கள் ஒலிபரப்பாகி பெரும் புரட்சியை ஏற்படுத்திய 'முகத்தார் வீடு' நாடகத்திற்கு இவர் திரைக்கதை அமைக்க கலைஞர் இரா குணபாலன் அவர்கள் தயாரிக்க இவரது இயக்கத்தில் வெளியானது. 'முகத்தார் வீடு' திரைப்படம். தொடர்ந்து 'நினைவு முகம்' 'மௌனம்' ஆகிய படங்களுடன் பிரான்ஸ் ஜெர்மன் கலைஞர்களின் கூட்டு முயற்சியில் உருவான 'தயவுடன் வாழவிடுங்கள்' ஆகிய படங்களையெல்லாம் இயக்கியுள்ளார்.

ரகுநாதன் அவர்களின் பால்யகால நண்பரும் 'கலையரசு' ஐயாவின் நாடகப் பட்டறையில் பயின்றவரும் தற்போது லண்டனில் பாரிஸ்ட்டராக பணி புரிந்துகொண்டு கலைப்பணி ஆற்றிவருபவருமான திரு.யோசப் அவர்கள் தயாரிக்க சுவீஸில் வாழ்கின்ற திரு. அஜீவன் அவர்கள் எழுதி இயக்கிய 'அழியாத கவிதை' என்னும் குறும்படத்திலும் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளார். அதுபோல இவருக்கு பெரும் சிறப்பையும் பாராட்டுக்களையும் பெற்றுக்கொடுத்த மற்றுமொரு குறும்படம் திரு. பரா அவர்களின் இயக்கத்தில் உருவான 'பேரன் பேத்தி' என்ற குறும்படமாகும்.

பாரிஸ் இருந்து வெளியான 'ஐரோப்பிய முரசு' பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்த இவர் பின்னர் திரு எஸ் கே காசிலிங்கம் அவர்கள் ஆசிரியராக இருந்த 'தமிழன்' என்னும் பத்திரிகையில் 1947 முதல் தான் சந்தித்த, தன்னைப் பாதித்த எழுத்தாளர்கள், நடிகர்கள், இசைக கலைஞர்கள், நடன மணிகள், நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் பற்றியெல்லாம் 'ஒரு ஒப்பனை இல்லாத முகம்' என்னும் தலைப்பில் முப்பது வாரங்களுக்கு மேலாக தொடராக எழுதியுள்ளார்.

இத்தனை சிறப்புகளும் தன்னகத்தே கொண்ட ரகுநாதன் அவர்களுக்கு கலைஞர்கள் பலரும் ஒன்று சேர்ந்து 2010ம் ஆண்டு பவளவிழா நடாத்திக் கௌரவித்ததோடு அந்த விழாவில் 'சுட்ட பழமும் சுடாத மண்ணும்' என்னும் தலைப்பில் சிறப்பு மலர் ஒன்றினையும் வெளியிட்டிருந்தார்கள் எண்பத்திரண்டு வயதில் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்தக் கலைஞன் 1947ம் ஆண்டு முதல் ஐந்து தலைமுறைக் கலைஞர்களுடன் நடித்த பெருமைக்குரியவராக திகழ்கின்றார். நலமுடன் வாழ்ந்து இவருடைய கலைவாழ்வு இன்னமும் தொடர நாமும் வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 5 | 7 | 1 | 9 | 3 | 8 | 2 |
| 3 | 2 | 9 | 4 | 6 | 8 | 7 | 1 | 5 |
| 7 | 1 | 8 | 2 | 3 | 5 | 9 | 6 | 4 |
| 5 | 4 | 6 | 3 | 7 | 2 | 8 | 9 | 1 |
| 8 | 3 | 1 | 5 | 9 | 6 | 2 | 4 | 7 |
| 2 | 9 | 7 | 1 | 8 | 4 | 6 | 5 | 3 |
| 6 | 7 | 3 | 9 | 4 | 1 | 5 | 2 | 8 |
| 1 | 8 | 2 | 6 | 5 | 3 | 4 | 7 | 9 |
| 9 | 5 | 4 | 8 | 2 | 7 | 1 | 3 | 6 |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| வ | வு | ளி | யா |
| ண் | ன் | கு | ம் |
| ற | ணா | ண் | சு |
| ல் | ஓ | லை | கா |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மு | ன் | ளி | வா | ய் | க் | கா |
| தி | த் | பு | ழ் | கூ | பு | ள |
| ச | ர | த | த | பு | ம | க |
| ம் | ச | வே | து | ன் | ப | ம் |
| வ | ன் | வி | க் | அ | ர | ட |
| ணை | தே | வீ | ரு | து | த | ட் |
| ஆ | ந் | தை | வி | ரை | ம் | வி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை இழக்காத தமிழ்ப்பெண்...

போரினால் கைகளை இழந்த போதும் தன்னம்பிக்கையால் சாதிக்கும் யாழ்ப்பாண பெண். யாழ்.வடமராட்சி பகுதியில் தன் அவயங்களை இழந்த பெண் ஒருவர், கணினி வகுப்பை நடாத்தி வாழ்க்கையை கொண்டு செல்வது தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது. செபஸ்டியன் செல்வநாயகி என்ற 42 வயதான பெண்ணுக்கு இரு கைகளும் இல்லை. அவர் யுத்த சூழ்நிலையால் தனது அவயத்தை இழந்துள்ளார்.

1990ம் ஆண்டு இடம்பெற்ற தாக்குதலின் சம்பவத்தின் போது தனது கைகளை இழந்துள்ளார். கைகளை இழந்த போதும், தன்னம்பிக்கையை இழக்காத செல்வநாயகி, தனது கால்களை கொண்டு பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறார். அவர் ஐந்து கணணிகளை வைத்துக்கு கொண்டு மாணவர்களுக்கு கணினி பாடம் கற்பித்து வருகிறார். கைகள் இல்லாத போதும் கால் விரல்கள் மூலம் கணினி வகுப்புகளை செய்து வருகின்றார்.


வடமாராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள வெற்றிலைக்கெணி பகுதியில் உள்ள தனது சிறிய வீட்டிலேயே ஐந்து கணிணிகளை வைத்து குறித்த பெண் கற்பித்து வருகின்றார். செல்வநாயகியின், அலுவலக உதவியாளர் கணிணியை முதலில் ஓன் செய்வார். அவர் கதிரையில் அமர்ந்து தனது கால் விரல்களால் கடவுச்சொல்லை தட்டச்சு செய்வார்.

குறித்த பெண் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாறே கணினியில் தட்டச்சு செய்து வருகின்றார். விடுதலைப் புலிகள் செயற்பட்ட காலத்தில், அவர்களின் அலுவலக பணிகளில் ஈடுபட்டுள்ளார். நிரலாக்க மற்றும் தரவு உள்ளீடு வேலையையும் அவர் செய்து வந்துள்ளார்.

திறந்த பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் கற்கைகளை செல்வநாயகி பூர்த்தி செய்துள்ளார். இதற்காக விடுதலைப் புலிகள் மற்றும் ஏனையவர்கள் உதவி புரிந்துள்ளனர். யுத்தம் முடிவடைந்து மூன்ற ஆண்டுகளுக்கு பின்னர் ,2012ம் ஆண்டில் செயற்கை உறுப்புக்களை பொருத்தும் முயற்சிகளை மேற்கொள்ள சென்னை சென்றுள்ளார். செலவுகள் அதிகம் என்பதால் அந்த முயற்சியை அவர் கைவிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வநாயகியின் தந்தை இறந்த பிறகு, தந்தையின் நண்பர்கள் மற்றும் அவரது பாதுகாவலர்களே அவரை பாதுகாத்து வருகின்றனர். நான் அரசியல் ரீதியாக புலிகள் தொடர்பில் கருத்து வெளியிட விரும்பவில்லை. ஆனால் என் தனிப்பட்ட விசுவாசத்தை காட்டுவேன் என செபஸ்டியன் செல்வநாயகி தெரிவித்துள்ளார்.

---

## ஒருவரிப் பொன் மொழிகள்:-

1-சேமிக்கக் கற்றுக்கொள் சிக்கனம் தானாகவே வரும்.
2-முயற்சி இல்லாத வாழ்வு துடுப்பு இல்லாத வாழ்வு போல.
3-பல துறைகளில் அறிவு இருப்பது உலகில் கிடைத்தற்கரிய செல்வம்.
4-நண்பர்களைப் பற்றி நல்லது பேசு விரோதிகள் பற்றி ஒன்றும் பேசாதே.
5-ஒருமுறை பேச முன்னர் இருமுறை யோசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் லஞ்சம்!... எதிலும் லஞ்சம்!........
## (தாயகப்பயணம் தந்த அனுபவம்)

(திருமதி.கலைவாணி.
ஏகானந்தராஜா - ஜேர்மனி)

வெளிநாட்டில் இருந்து தாயகம் திரும்பிய எமக்குக் காத்திருந்த அதிர்ச்சியான அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறேன். கடந்த சில வருடங்களாக நாம் தொடர்ந்து தாயகம் செல்வதால் அங்கு சிறியரக மோட்டார் சயிக்கிள் ஒன்றையே நாம் பயன்படுத்துவதுண்டு. பொருட்கள் கொள்வனவு செய்யவும் கோவில்களுக்கு சென்று வரவும் நினைத்தநேரம் உறவினர்களை சென்று பார்த்துவரவும் அதுவே எமக்கு சௌகரியமாக இருந்தது. கடந்த நான்கு ஆண்டுகளிலும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஆமிக்காறரே நின்றிருந்தனர். ஒருபோதும் எந்தவிதத்திலும் தொல்லை கொடுத்ததில்லை.

இந்தஆண்டு சென்றிருந்தபோது பொலிஸ் பாதுகாப்பு சேவையில் இருந்தனர். சென்ற இடமெல்லாம் நிறுத்துவதும் ஏதாவது ஒருவகையில் பணம் பறிப்பதுமாக காணப்பட்டது. பொங்கலுக்கு முதல் நாள் என் கணவரை நிறுத்தி அடையாள அட்டை வாகனப்பத்திரம் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் எல்லாமே கேட்டுப் பார்த்தனர். எல்லாமே சரியாக இருக்கும் பட்சத்தில் நாளை உங்களது பெருநாள் அல்லவா எங்களுக்கு எதுவும் இல்லையா என்று அப்பட்டமாகவே பணம் கேட்டு வாங்கினான் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர்.

அதுமட்டுமின்றி அவ்வழியால் தலைக்கவசம் இல்லாமல் சென்றவரை நிறுத்தி நீ தலைக்கவசம் இல்லாமல் வாகனம் ஓட்டியதாக கோட்டில் நிறுத்தப்போகிறேன். அங்கு நீ 10 ஆயிரம் தண்டப்பணம் செலுத்தவேண்டி வரும் இப்போ எனக்கு 2 ஆயிரம் தந்தால் எழுதாமல் விட்டுவிடுகிறேன் என்று கூறி பணத்தைப் பெற்றுக்கொண்டான். மற்றுமொருவரிடம் கட்டுப்பாட்டு வேகத்தை மீறி ஓட்டியதற்காக இதேபோல் கூறி மூவாயிரம் பெற்றுக் கொண்டான். ஒருவர் ஓட்டுனர் பத்திரத்தை வீட்டில் மறந்து வைத்துவிட்டதாகவும் உடனேயே எடுத்துவந்து தருவதாக கெஞ்சிப் பார்த்தார். கோட்டில் நிறுத்தப்போகிறேன் அங்கு 25 ஆயிரம் தண்டம் செலுத்தவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் 5 ஆயிரம் தந்தால் எழுதாமல் விடுகிறேன் என்று கூறி 5 ஆயிரத்தை வாங்கி தன் காற்சட்டைப் பைக்குள் திணித்துக்கொண்டான். இப்படியாகத் தமிழர்களிடம் கப்பம் வாங்கும் கலாச்சாரம் அங்கு தொடர்கிறது. தும்மல் கிழவியை விரட்டிவிட்டு இருமல் கிழவியை கொண்டு வந்ததுபோல ஆமிக்காறர்களை வெளியேற்றிவிட்டு பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் மாட்டிக்கொண்டு தவிக்கிறார்கள் தாயக மக்கள்.தமிழனே தமிழரிடம் கொள்ளையடிக்கும்போது சிங்களவர் தமிழரிடம் கொள்ளையடிப்பது ஒன்றும் புதிதில்லையே.

என் கணவரின் கண்ணாடியை மாற்றவேண்டி இருந்தது. அதனால் கண்ணாடி வாங்குவதற்காக ஒரு கடைக்குச் சென்றோம். அங்கு கண்ணை மீண்டும் பரிசோதனை செய்துவிட்டு கண்ணாடி தருவதாக சொல்லி பரிசோதனைகள் நடைபெற்றது. இறுதியில் கண்ணைப் பரிசோதித்தவர் கூறினார் 'இதுவரை நீங்கள் பாவித்த கண்ணாடியை விட கூடுதலான பார்வைக்குரிய கண்ணாடி செய்ய முடியாது. நீங்கள் சம்மதித்தால் சிறிய சத்திர சிகிச்சை செய்த பின்னரே கண்ணாடி தரமுடியும் என்றும் அதற்கான செலவு ஒரு லட்சம் ரூபா என்றும் சத்திர சிகிச்சையின்போதே கண்ணில் லென்ஸ் எனப்படும் வில்லையைப் பொருத்துவதற்கு ஒன்றரை லட்சம் பணம் தேவைப்படும் என்றும் கூறினார். நாம் யோசித்துவிட்டு வருகிறோம் என்று கூறி விடைபெற்றோம். யேர்மனிக்கு வந்ததும் கண் வைத்தியரிடம் சென்று காட்டினோம். அதே கண்ணாடி போதுமானதாகவும் அப்படி சத்திரசிகிச்சை செய்யவேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று கூறி அனுப்பினார்.

வேலியே புல் மேய்வது போல தற்போது நமது நாட்டில் எம்மவரின் செய்கைகள் அமைந்துள்ளன. உத்தியோகஸ்தவர்களின் ஏமாற்று வித்தைகள் தான் இப்படி என்றால் சாதாரண தொழிலாளர்கள் விடுவார்களா? நாம் யேர்மனி திரும்புவதற்கு ஒரு வாரம் இருக்கும் போது வாங்கிய சேலைகளுக்கான மேல் சட்டைகள் தைப்பதற்காக பலரிடம் விசாரித்து முன் பின் பழக்கமில்லாத ஒரு பெண்ணின் தையல் நிலையத்துக்கு சென்றேன். அங்கு சாதாரணமாக ஒரு சட்டைக்கு 350 ரூபா என்று கூறவே நான்கு சட்டைகளை தைப்பதற்கான அளவுகளும் கொடுத்து முடித்தேன். இறுதியாக 'எப்போது வந்து பெற்றுக்கொள்ளலாம்' என்று கேட்டபோது அவர் கேட்ட கேள்வி என்னை தூக்கி வாரிப் போட்டது. எவ்வளவு கவனமாக வெளி நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வந்தவள் என்பதை காட்டிக்கொள்ளாமல் நான் முன்னெச்சரிக்கையாக இருந்தும் இந்தக் கடை முதலாளி 'எப்போ திரும்பிப் போகின்றீர்கள்' என்று கேட்டார். நான் குறிப்பிட்ட நாளுக்கு முன் தினத்தில் தருவதாக கூறினார். நானும் சம்மதித்தேன். சட்டை தைத்து முடிந்ததும் 350 ரூபா பேசி கொடுத்த சட்டைக்கு 450 படி கணக்கு கொடுத்தார். இதற்கு கழுத்தில் பட்டி வைத்தோம் மற்றையதற்கு கையில் மணிவைத்தோம் என்று தலையில் மிளகாய் அரைத்துவிட்டார். சரி போகட்டும் என்று ஊரிலிருந்து திரும்பிய பின்னர் சட்டைகளை எடுத்துப் பார்த்தேன். கொடுத்த துணியை எடுத்துக்கொண்டு ஏமாற்று வேலைகள் செய்திருந்தது மிக வேதனையை தந்தது.

தாயகத்தில் நடந்தேறிய போர் அனத்தங்களால் அங்கங்களை இழந்தவர்கள்பாதிக்கப்பட்டவர்களை பார்த்து இரங்கி உதவி புரிந்தேன். அப்போதுதான் நல்லூர் வீதியில் கையை சட்டைக்குள் மறைத்து வைத்திருப்பவர்களையும், கால்களை மடக்கி வைத்திருப்பவர்களையும் இனம் காட்டினார்கள். இப்படியாக பிச்சைக்காறர் தொடக்கம் உத் தியோகத் தவர் வரை பணத்திற்காக மனிதரை மனிதன் மனிதாபிமானமற்ற முறையில் ஏமாற்றுவதை கண்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

அப்படியாக நம் தாயகத்தில் லஞ்சமும் பகற்கொள்ளையும் தலைவிரித்தாடுவதை நான் நேரில் பார்த்தேன். எங்கும் சகல துறைகளிலும் லஞ்சம்தான். அன்றாடவாழ்வில் எதிலும் தலை விரித்தாடுவதைக் காணக்கூடியதாகவே நிலமை உள்ளது.

வெளிநாட்டு உதவிகளும் வசதிவாய்ப்புக்களும் எவ்வளவு தொகையாகப் போய்ச் சேருகின்றதோ அந்த அளவுக்கு லஞ்சம் பெருகியிருப்பதைக் காணக்கூடியதாகவே இருக்கின்றது. வெளிநாட்டுப்பணம் தானே என்று சிறிதும் பாராமல் லஞ்சம் கொடுப்பவர்களும் லஞ்சம் வாங்குபவர்களும் மிக இலகுவாகப் பணத்தைப் பார்க்கிறார்கள்.

ஆனால் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் இந்தப் பணத்தை உழைக்க எவ்வளவு துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்று எள்ளளவும் சிந்தனை கிடையாது. ஆகவே தாயகம் செல்லும் உறவுகளே இந்த லஞ்ச வலையில் விழுந்திடாமல் அவதானமாக நடந்துகொள்ளுங்கள். பாதுகாப்பாகச் சென்றுவாருங்கள்.

--------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் தினம் (மே தினம்)...

மே நாள் அல்லது மே தினம் எனப்படும் உலகத் தொழிலாளர் தினம் ஆண்டுதோறும் மே முதலாம் திகதி (மே 1) உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுவதாகும்

## தொழிலாளர் போராட்டம்

18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் - 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வேகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளிகள் பலரும் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரக் கட்டாய வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதற்கெதிரான குரல்களும் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் துவங்கியது. இதில் குறிப்பிடத்தக்கது இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம் (chartists). சாசன இயக்கம் 6 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தொடர் இயக்கங்களை நடத்தியது. அதில் குறிப்பிடத்தக்கது

## பிரான்சில் தொழிலாளர் இயக்கம்

1830களில் பிரான்சில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் தினமும் கட்டாயமாக 15 மணி நேரம் உழைக்க வேண்டி இருந்தனர். இதை எதிர்த்து அவர்கள் பெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர். 1834இல் ஜனநாயகம் அல்லது மரணம் என்ற கோஷத்தை முன்வைத்து பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இவையனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன.

## ஆஸ்திரேலியாவில் தொழிலாளர் இயக்கம்

ஆஸ்திரேலியாவில் மெல்பேர்னில் கட்டிடத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் உலகிலேயே முதன் முதலாக 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து 1856இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, வெற்றியும் பெற்றனர். இது தொழிலாளி வர்க்க போராட்டத்தின் மைல் கல்லாக அமைந்தது.

## ரஷ்யாவில் மே தினம்

முதல் மே நாளின் போது ருசியாவில் ஒட்டப்பட்ட சுவரொட்டி சார் மன்னரின் ஆட்சியின் கீழ் ரஷ்யத் தொழிலாளிகள் பெரும் துன்பங்களுக்கு ஆளானார்கள். இங்கும் 1895 - 1899க்கு இடைப்பட்ட காலத்தில் நூற்றுக்கணக்கான வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. 1896 ஏப்ரல் மாதத்தில் லெனின் மே தினத்திற்காக எழுதிய சிறு பிரசுரத்தில், ரஷ்யத் தொழிலாளிகளின் நிலைமை குறித்து விரிவாக அலசியதோடு, ரஷ்யத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களின் பொருளாதார போராட்டம் - அரசியல் போராட்டமாக எழுச்சிக் கொள்ள வேண்டும். என்பதையும் வலியுறுத்தினர். தொழிலாளிகளின் 8 மணி நேர வேலைக்கான போராட்டங்களே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்காவில்

அமெரிக்காவில் 1832இல் பொஸ்டனில் கப்பலில் பணியாற்றிய தச்சுத் தொழிலாளர்கள் 10 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்தனர். அதே போல், 1835இல் பிலடெல்பியாவிலும், பென்சில்வேனியாவிலும் இதே கோரிக்கையை முன்வைத்து இயக்கம் நடத்தப்பட்டது. பென்சில்வேனியாவில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும், இரயில்வே தொழிலாளர்களும் குறைவான வேலை நேரத்தை வலியுறுத்தி 1877இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து "அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு" என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து இயக்கங்களை நடத்தியது. அத்தோடு மே 1, 1886 அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இவ்வியக்கமே மே தினம் பிறப்பதற்கு காரணமாகவும் அமைந்தது.

தொழில் நகரங்களான நியூயார்க், சிகாகோ, பிலடெல்பியா, மில்விக்கி, சின்சினாட்டி, பால்டிமோர் என அமெரிக்கா முழுவதும் 3,50,000 தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலை நிறுத்தம் துவங்கியது. இவ்வேலை நிறுத்தத்தில் 1200க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். தொழிலாளர்களின் எழுச்சிமிக்க வேலை நிறுத்தத்தினால், அமெரிக்க பெரு நிறுவனங்கள் மூடப்பட்டன. இரயில் போக்குவரத்து நடைபெறவில்லை. வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிலாளர் ஊர்வலங்கள் அமெரிக்காவை உலுக்கியது. மிச்சிகனில் மட்டும் 40 ஆயிரம் தொழிலாளர்களும், சிக்காகோவில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

### சிக்காகோ பேரெழுச்சி

மே 3, 1886 அன்று "மெக்கார்மிக் ஹார் வஸ்டிங் மெஷின் நிறுவனத்தின்" வாயிலில் 3000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அணி திரண்டு கண்டனக் கூட்டத்தை நடத்தினர். இங்கு இடம்பெற்ற கலவரத்தில் 4 தொழிலாளர்கள் காவற்துறையினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சம்பவத்தை கண்டிக்கும் வகையில் ஹேமார்க்கெட் சதுக்கத்தில் மே 4 அன்று மாபெரும் கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தினர் தொழிலாளர்கள். 2500 தொழிலாளர்கள் கலந்து கொண்ட கண்டனக் கூட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது. இந்நேரத்தில் காவல்துறையினர் அனைவரையும் கலைந்து செல்லுமாறு கூறினர். இவ்வேளையில் திடீரென்று கூட்டத்தில் வெடிகுண்டு வீசப்பட்டதில் அந்த இடத்திலேயே ஒரு காவல்துறையினர் பலியானார்.

பின்னர் போலீசார் கூட்டத்தினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தித் தொழிலாளரைத் தாக்கினர். அத்துடன் தொழிலாளர் தலைவர்களை கைது செய்து வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்கு ஜூன் 21, 1886 அன்று துவங்கியது. 7 பேருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. இந்நிகழ்வு ஹேமார்க்கெட் படுகொலை என அழைக்கப்படுகிறது. இந்த நிகழ்வினை ஒட்டி அந்த ஹேமார்க்கெட் சதுக்கத்தில் நினைவுச் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின் கறுப்பு தினம்

நவம்பர் 11, 1887 அன்று தொழிலாளர் தலைவர்கள் ஆகஸ்ட் ஸ்பைஸ், ஆல்பேர்ட் பார்சன்ஸ், அடொல்ஃப் ஃபிஷர், ஜோர்ஜ் ஏங்கல் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர். நவம்பர் 13, 1887 அன்று நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் அமெரிக்க தேசமே அணி திரண்டது. நாடு முழுவதும் 5 லட்சம் பேர் இவர்களது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டதோடு, அமெரிக்கா முழுவதும் கறுப்பு தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. அமெரிக்க தொழிலாளர்களின் 8 மணி நேர வேலைக்கான போராட்டமும், சிகாகோ தியாகிகளின் தியாகமும்தான் இன்றைக்கு மே தினமாக - உழைப்பவர் தினமாக நம்முன் நிற்கிறது.

## அனைத்து நாடுகளிலும் மே தினம்

1889 ஜூலை 14 அன்று பாரீசில் சோசலிசத் தொழிலாளர்களின் "சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றம்" கூடியது. 18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்பட பலர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேர போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்றும், சிக்காகோ சதியை இம்மாநாடு கடுமையாக கண்டித்ததோடு, 1890 மே 1 அன்று அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட வேண்டும் என்றும் அறைகூவல் விடப்பட்டது. இந்த அறைகூவலே மே முதல் நாளை, சர்வதேச தொழிலாளர் தினமாக, மே தினமாக அனுஷ்டிப்பதற்கு வழிவகுத்தது.

--------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய நிகழ்வுகள்...

(வைகாசி + ஆனி)

இலங்கை:-

05.05.1976-தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் சூட்டப்பட்ட நாள்.

09.05.1985-வல்வெட்டித்துறை நூல்நிலையத்தில் வைத்து 50 பொதுமக்களை இலங்கை இராணுவம் சுட்டுக்கொன்றது.

10.05.00-வெசாக் தினம்.

12.05.1656-ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றியநாள்.

15.05.1985-நெடுந்தீவு - குறிகட்டுவன் குமுதினி படகுப் படுகொலை. கடற்படையினரால் 30 பேர் கொல்லப்பட்ட நாள்.

19.05.1978-ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசால் விடுதலைப்புலிகள் மீதான தடைச்சட்டம் முதன்முறையாகப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.

22.05.1958-தமிழின இனப்படுகொலை ஆரம்பிக்கப்பட்ட நாள் பலநூறுபேர் கொல்லப்பட்டனர்.28.05.1958 வரை நடைபெற்றது.

23.05.1994-விடுதலைப்புலிகளின் தமிழீழ வைப்பகம் (வங்கி) ஆரம்பிக்கப்பட்டது.

31.05.1981-ஜே.ஆர் அரசால் யாழ் பொதுநூலகம் தீயிட்டுக் கொழுத்தப்பட்டநாள்.

05.06.1956-பண்டாரநாயக்கா ஆட்சியில் சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் பிரகடனப்படுத்தப்பட்டது.

10.06.1986-அம்பாறைப் படுகொலை 150 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

-மண்டைதீவு - குருநகர் படுகொலை 34 பேர் கொல்லப்பட்டனர்.

10.06.1998-கிளிநொச்சி சுதந்திரபுரம் படுகொலை 25 பேர் கொல்லப்பட்டனர்.

12.06.1991-கொக்கட்டிச்சோலை படுகொலைநாள் 65 தமிழர்கள் பலியாகினர்.

20.06.1659-போத்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றினர்.

பிரமுகர்கள்:-

01.05.1993-ஜனாதிபதி பிரேமதாசா நினைவுநாள்

04.05.1873-சேர் முத்துக்குமாரசாமி நினைவுநாள் (1834-1873)

05.05.1910-பிரித்தானிய இலங்கை மன்னன் 7ம் எட்வேட் நினைவுநாள்

13.05.1978-தவில் வித்துவான் தெட்சணாமூர்த்தி நினைவுநாள்

13.05.1962-வைத்திய கலாநிதி இரத்தினம் நினைவுநாள் (1873-1962)

14.05.1965-புலோலியூர் புலவர் கந்தமுருகேசனார் நினைவுநாள்(27.04.1902)

25.05.1876-தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பிறந்தநாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05.06.1974-தியாகி சிவகுமாரன் (உரும்பராய்) நினைவுநாள் 28.06.1950-05.06.1974)
05.06.1994-வில்லிசை மன்னன் வீரமணி நினைவுநாள் (26.08.1932-05.06.1994)
06.06.1944- தவில்வித்துவான் கைதடி பழனிமலை பிறந்தநாள்.
07.06.1906-பொன் குமாரசாமி நினைவுநாள்.
08.06.1874-சட்டசபை சபாநாயகர் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி பிறந்தநாள்.
11.06.1994-தேசப்பற்றாளர் பேராசிரியர் அ.துரைராசா நினைவுநாள்(10.11.1934பிறப்பு
11.06.1838-அறிஞர் சித்திலெப்பை பிறந்தநாள்(05.02.1898 மறைவு)
21.06.1951-யாழ்ப்பாணத்தில் முதல் தமிழ்பத்திரிகை ஆரம்பித்த ஈழகேசரி பொன்னையா நினைவுநாள் (1892-1951)

**உலகம் பொது:-**

01.05.0000-உலகத்தொழிலாளர் தினம்.
08.05.1858-செஞ்சிலுவைச் சங்கம் சுவீஸ்லாந்தில் ஆரம்பிக்கப்பட்டது. கென்றி ட்யூனல்ட் என்பவரால் தொடங்கப்பட்டது.
12.05.0000-சர்வதேச தாதிமார் தினம்.
18.05.1848-முதல் முதல் பெண்கள் உரிமை மகாநாடு அமெரிக்கா நியூயோர்க்கில் நடைபெற்றது.
30.05.1950-ஸ்பெயின் நாட்டவரான பிக்காசோ அமைதியின் அடையாளமாள வெள்ளைப்புறாவை வரைந்தார். அதுவே உலகம் முழுவதும் அடையாளமாகியது
31.05.0000-உலக புகைத்தல் எதிர்ப்பு தினம்.
31.05.0971-முதன்முதல் எகிப்தில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

05.06.0000-உலகச் சுற்றாடல் தினம்.
13.06.1944-பிரான்சை ஜேர்மனியப் படைகளிடமிருந்து மீட்க அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் படைகள் இணைந்து நடத்திய தரைஇறக்கம் D.Day நிகழ்ந்தநாள்.
26.06.0000-உலக போதைவஸ்த்து எதிர்ப்பு தினம்.

## பிரமுகர்கள்:-

05.05.1821-பிரென்ஸ்சுச் சக்கரவர்த்தி நெப்போலியன் நினைவுநாள் (15.8.1769 .பி)
07.05.1910-உலகப்புகழ் எழுத்தாளர் ரஷ்ஷிய நாட்டவரான லியோ ரொல்ஸ்ரோய் நினைவுநாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.05.0212-உலகப்புகழ் கணிதமேதை (நெம்புகோல் தத்துவம்) ஆர்ச்கிமிடிஸ் நினைவு நாள். இவர் இத்தாலி நாட்டவர்.
21.05.1991-இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி நினைவுநாள்.
27.05.1964-இந்திய முதல் பிரதமர் பண்டிதர் ஜவகல்லால் நேரு நினைவுநாள்.
27.05.1597-கோட்டை மன்னன் டொன் யுவான் தர்மபாலா நினைவுநாள்.
29.05.1917-அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ் கென்னடி பிறந்தநாள்(22.11.1963)

03.06.1924-கலைஞர் கருணாநிதி பிறந்தநாள்.
03.06.1925-தமிழ்நாடு சுதந்திரவீரர் சுப்பிரமணியஐயர் நினைவுநாள்.
03.06.1963-பாப்பரசர் 23ம் அருளப்பர் நினைவுநாள் (1881-1963)
12.06.1973-இஸ்ரேல் முதலாவது பிரதமர் பென்கூரியர் நினைவுநாள்(1880)
13.06.1896-டைனமெட்டைக் கண்டுபிடித்தவர் நோபல் பரிசின் தந்தை அறிமுகப்படுத்தியவர் சுவீடன் நாட்டவரானா நோபல் நினைவுநாள் (1833)
14.06.1928-உலகப்புரட்சி வீரன் செகுவேரா பிறந்ததினம் (09.10.1967 மறைவு)
16.06.1848-உலகப்புகழ் தத்துவஞானி அரிஸ்டோட்டல் நினைவுநாள் (1718பிறப்பு)
17.06.1324-இத்தாலியர் கடலோடி மார்க்கப்போலோ நினைவுநாள் (1254 பிறப்பு)
18.06.1858-இந்திய விடுதலை வீராங்கனை ஜான்ஸி ராணி லக்ஸ்மிபாய் நினைவுநாள் 16.11.1834-18.06.1858)
19.06.1525-பிரபல கடலோடி வாஸ்கொடகாமா நினைவுநாள் (1469-1525)
22-06-0479-சீனத்தத்துவஞானி கொன்பியூசியஸ் நினைவுநாள்.
23.06.0044-றோமானியச் சக்கரவர்த்தி யூலியசீஸர் நினைவுநாள்.
24.06.1921-கவியரசு கண்ணதாசன் பிறந்தநாள் (24.06.1921-17.10.1981)

## கண்டுபிடிப்புக்கள்:-

02.05.1882-மின்காற்றாட்டியை முதன்முதல் கண்டறிந்தவர் அமெரிகரான வீலர் என்பவர்.
10.05.1938-ஜெனரல் எலெக்ரிக் கம்பனி முதன்முதல் அமெரிக்காவில் அறிமுகமானது.
11.05.1628-இங்கிலாந்து விஞ்ஞானியான வில்லியம் கெர்வே என்பவர் முதன்முதல் மனிதனின் குருதிச்சுற்றோட்டத்தைக் கண்டறிந்தார்.
12.05.1938-கண்ணாடி இழைநாரினை அமெரிக்கரான கோர்மிங் கண்டறிந்தார்.
13.05.1924-ஒலிபெருக்கியை அமெரிகரான ரைஸ் என்பவர் கண்டறிந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.05.1769-தரையில் ஓடும் நீராவி இயந்திரத்தை பிரான்ஸ் நாட்டவரான நிக்கிலஸ் என்பவர் கண்டறிந்தார்.
16.05.0650-பாராசீகரால் முதன்முதல் காற்றாடி கண்டுபிடிக்கப்பட்டது.
24.05.1875-அமெரிக்காவைச் சேர்ந்த அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல் என்பவர் தொலைபேசியைக் கண்டறிந்தார்.
27.05.1854-தாதிகள் பயற்சிக்கல்லூரி முதன்முதலாகப் பிரித்தானியாவில் நிறுவப்பட்டது. இதை நிறுவியவர் புளோறன்ஸ் நைற்றிங் கேள் என்பவராவர்.

04.06.1750-அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானி பெஞ்சமின் பிராங்ளின் முதன் முதல் மின்னலின் சக்தியைக் கண்டறிந்தார்.
14.06.1879-வியாபார விற்பனைப் பணவருமதிகளைப் பதிவுசெய்யும் கருவியை Cash Register அமெரிக்காவைச் சேர்ந்த ரிட்டி என்பவர் கண்டறிந்தார்.
16.06.1709-பியானோ இசைக்கருவியை இத்தாலி நாட்டவரான கிரிஸ்டோவெரி என்பவர் முதன்முதல் கண்டறிந்தார்.
19.06.1938-குமுழ்முனைப் பேனாவை கங்கேரி நாட்டவரான பிரோ என்பவர் கண்டுபிடித்தார்.
22.06.1849-பாதுகாப்பு ஊசி (Safty Pin) அமெரிக்காவைச் சேர்ந்த ஷன்ட் என்பவர் கண்டுபிடித்தார்.

---

## 2030 களில் பெண்களின் சராசரி ஆயுட்காலம் 90 வயது

2030களில் பெண்களின் சராசரி ஆயுட்காலம் 90 வயதை எட்டக்கூடும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.
லண்டன் இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த ஆய்வு குழுவினர் ஆய்வு ஒன்றை நடத்தி கணிப்பை வெளியிட்டுள்ளனர்.பெண்களின் சராசரி ஆயுட்காலம் தொடர்பாக 35க்கும் மேற்பட்ட வளர்ந்த நாடுகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அவர்களது முழு ஆய்வுக் கணிப்பு லான்செட் பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் விவரம் தற்போது வளர்ந்து வரும் நவீன மருத்துவ உலகில் சராசரி ஆயுட்காலம் அதிகரித்து வருகிறது. உலகில் மிகக் கூடிய சராசரி வயதை உடைய பெண்கள் தென்கொரியப் பெண்களே என்று ஆய்வு ஒன்றில் இருந்து தெரியவந்துள்ளது. "த லேன்சே" என்ற அமைப்பு நடத்திய ஆய்வொன்றில் இருந்தே இது தெரியவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவும் யுத்த மேகங்களும்....

ஆசியாவிலே சின்னஞ்சிறிய நாடுதான் வடகொரியா. இந்த நாட்டின் சனத்தொகை சுமார் 2 கோடி 32 லட்சமாகும். 15.08.1945 ஆண்டுவரை யப்பானிய ஆட்சிக்குக்கீழ் இருந்து விடுதலை பெற்று கொரிய ஜனநாயக மக்கள் குடியரசாக உருவாகியது. பின்னர் 1948ம் ஆண்டு வட கொரியா - தென்கொரியா எனப் பிரிந்தன. அணு ஆயுத நாடாகாவும் உலகில் படையணிகள் கூடிய நாடுகள் தரவரிசையில் நான்காவது இடத்தை வகிக்கின்றது. (1வது சீனா, 2வது அமெரிக்கா, 3வது இந்தியா)

பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடாக இருந்தாலும் அணு ஆயுத நாடாகவும் விண்வெளி ஆய்வில் முழக்கவனத்தையும் ஈர்க்கும் நாடாகவும் இது விளங்குகின்றது. "கடுகு சிறிதாயினும் காரம் பெரிது" என்று சொல்வதைப் போல இது சிறிய நாடு என்றாலும் அணு ஆயுத பரிவர்த்தனையில் முன்னேறிவரும் நாடாகக் காணப்படுகின்றது.

இன்று உலகின் மிகப்பெரும் வல்லரசு நாடான அமெரிக்காவிற்கே சவால் விட்டுத் தனது ஆயுத பலத்தை நிரூபித்து வருகின்றது. அமெரிக்கா உட்படப் பல நாடுகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் இந்த நாடு அண்டை நாடுகளான தென்கொரியா, யப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் மீதும் எதிர்ப்பலையை சம்பாதித்ததுள்ளது. ஏன் ஐரோப்பிய சில நாடுகளும் வடகொரியாவின் அணுப்பரிசோதனையை அவ்வப்போது கண்டித்தும் வருகின்றன.

இந்த நாடுமீது ஐக்கிய நாடுகள் சபை உட்பட அமெரிக்கா மற்றும் சில நாடுகள் ஏற்கனவே பொருளாதாரத் தடையை விதித்திருக்கின்றன. பொருளாதாரத் தடைகளுக்கோ அணு ஆயுதத் தாக்குதலுக்கோ அஞ்சமாட்டோம், பதிலடி கொடுப்போம் என வடகொரியா வீறுகொண்டு எழுந்து நிற்கையில் அமெரிக்கா தனது தாக்குதலுக்கான திட்டங்களை வகுத்து வருகின்றது. சில சமயம் இன்றோ நாளையோ யுத்தம் வெடிக்கலாம். சில சமயம் உலகப்போராகவும் மாறச் சந்தர்ப்பம் இருப்பதாக அவதானிகள் தெரிவிக் கின்றனர். ஆனால் ரஷ்ஷியா, சீனா போன்ற வல்லரசு நாடுகள் மௌனம் காக்கின்றன.

கம்யூனிச நாடான வடகொரியா தன்னிடமுள்ள அணு ஆயுதங்களை வெளி உலகத்திற்குக்காட்டித் தனது பலத்தைக் காட்டிவரும் வேளையில் சிறு குறிப்பை இங்கே காண்போம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகொரியா தற்போது வைத்திருக்கும் ஏவுகணைகளும் கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து தாக்கும் ஏவுகணைகளின் தொகைகளைப் பார்ப்போம்..

ஏவுகணைகளின் பெயர் - சென்று தாக்கியழிக்கும் சுற்றுவட்டம்

| | |
|---|---|
| 1-SCUD B-C-ER | - 290 - 966 கிலோமீட்டர் |
| 2-KN-11 | - 966 - 1.287 " |
| 3-NODONG | - 1287 - 3.540 " |
| 4-MUSUDAN | - 3540 - 9.977 " |
| 5-KN-14 | - 9.977 - 11.587 " |
| 6-KN-08 | - 11.587 கிலோமீட்டர் தாண்டிச் சென்றுதாக்கும் |

இந்தநாடு இதுவரை மேற்கொண்ட ஏவுகணைப் பரிசோதனைகள் முன்னாள் அதிபர் Kim Jong காலத்தில் (1994 - 2011வரை)


| ஆண்டு | அணுஆயுத ஏவுகணைப்பரிசோதனை | ஏவுகணைப்பரிசோதனை |
|---|---|---|
| 2003ம் ஆண்டில் | 01 தடவைகள் | 04 தடவைகள் |
| 2004ம் " | 00 | 01 |
| 2005ம் " | 00 | 01 |
| 2006ம் " | 01 | 05 |
| 2007ம் " | 00 | 03 |
| 2008ம் " | 00 | 00 |
| 2009ம் " | 03 | 11 |
| 2010ம் " | 00 | 00 |

முன்னைய தலைவர் Kim Jong மகன் தற்போதய அரச தலைவரான Kim Jong Un ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட அணு ஏவுகணைப் பரிசோதனைகள்.

| | | |
|---|---|---|
| 2011ம் ஆண்டில் | 00 தடவைகள் | 00 தடவைகள் |
| 2012ம் " | 00 | 04 |
| 2013ம் " | 01 | 05 |
| 2014ம் " | 03 | 15 |
| 2015ம் " | 03 | 15 |
| 2016ம் " | 04 | 18 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் படத்தைப் பார்த்தால் வடகொரியா தனது நாட்டிலிருந்துகொண்டே சுமார் 12 ஆயிரம் கிலோமீட்டர் சுற்றுவட்டத்திலுள்ள நாடுகளைத் தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டிருப்பது தெரியவருகின்றது. மிகப்பெரும் கனரக அணு ஆயுத ஏவுகணைகளை வைத்திருக்கும் இந்த நாடு இன்று வல்லரசு நாடுகளுக்கு அச்சுறுத்தல் மிகுந்த நாடாகவே விளங்குகின்றது. ஆனால் அமெரிகா உட்படச் சில வல்லரசு நாடுகளும் ஏனைய சில நாடுகளும் அணு ஆயுத ஏவுகணைகளை வைத்திருக்கின்றமை உண்மையே. ஆனால் அந்த நாடுகள் வெளிக்காட்டாமல் வைத்துக்கொண்டு வடகொரியா நாடு மிகவும் ஆபத்தான நாடு என்று கூறுகின்றன. எனவே போர் மூண்டால்தான் எந்த நாட்டிடம் எப்படியான அணு ஆயுதங்கள் இருக்கின்றன என்பது வெளிவரும். எது எப்படி இருந்தாலும் யுத்தத்தையும் உயிர் அழிவுகளையும் இந்தப் பூமி விரும்பவில்லை என்பதே நிஜமான விடையமாகும்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு.....

திருமதி ஜெயா நடேசன்
ஜேர்மனி.

01-உலகில் முதன் முதலில் பன்றிக்காய்ச்சல் கண்டுபிடிக்கப்பட்ட நாடு எது?
மெக்ஸிக்கோ.

02-பன்றிக்காய்ச்சலுக்குரிய தடுப்பூசியினைக் கண்டுபிடித்த நிறுவனநாடு எது?
ஜேர்மனி.

03-எயிட்ஸ் நோயினைக் கண்டுபிடித்தவர் யார்?
Dr. லொக்மெனிட்டர்

04-உலகில் கண்ணாடி செய்வதை முதலில் கண்டறிந்தவர்கள் யார்?
சீனர்கள்.

05-சொர்க்கத்தின் பழம் என்பது எது?
வாழைப்பழம்.

06-உலகில் இரத்ததானம் அதிகம் செய்யும் நாடு எது?
இந்தியா.

07-உலகில் பெரும்பான்மையாகப் பேசப்படும் மொழி எது?
சீனமொழி.

08-உலகிலே மிக வேகமாகப் பேசப்படும் மொழி எது?
பிரான்ஸ்மொழி.

09-மரத்திலான கைக்கடிகாரம் முதன்முதலில் எந்தநாட்டில் உருவாக்கப்பட்டது? -சுவீஸ்லாந்து.

10-குக்கூ கடிகாரம் முதன்முதலில் உருவாக்கப்பட்ட நாடு எது?
ஜேர்மனி.

11-போல்ட் பெயின்ட் பேனாவைக் கண்டுபிடித்தவர் எந்தநாட்டவர்?
கங்கேரி.

12-உலகிலே மிகப்பெரிய யேசுநாதர் சிலை எங்கு உள்ளது?
பாக்கிஸ்த்தான்.

13-உலகில் சனத்தொகை விகிதாசாரப்படி கிறிஸ்த்தவர்கள் அதிகம் வாழம்நாடு எது? - பிலிப்பைன்ஸ்

14-உலகில் முதன்முதலில் கலர் ரெலிபோனை அறிமுகம்செய்த நாடு எது?
பிரான்ஸ்.

15-உலகிலே அதிக காய்கறிகளைப் பயிரிடும் நாடு எது?
சீனா.

16-உலகிலே தமிழர்கள் அதிகமாக வாழும் நாடு எது?
இந்தியா.

17-ஆசியாவில் மிகப்பெரிய கப்பல் துறைமுகம் எங்குள்ளது?
சிங்கப்பூர்.

18-தேன்கிண்ண நாடு என்று எந்தநாட்டை அழைப்பார்கள்?
கியூபா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருமுறை இந்த பழங்களை சாப்பிடுங்கள்: கொலஸ்ட்ராலைக் குறைக்குமாம்........

உடலின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் பழங்கள் மற்றும் காய்கறிகள் முக்கிய பங்கினை வகிக்கிறது. அந்த வகையில் உள்ள சில அற்புதமான பழங்கள் இதோ!

### கிவி

கிவி பழம் சுவையான பழங்களின் ஒன்றாகும். இந்த கிவி பழத்தில் விட்டமின் அதிகமாக நிறைந்துள்ளதால், இது கொலஸ்ட்ராலைக் குறைக்க உதவுகிறது.

### ஆலிவ்

பல்வேறு நிறங்களில் உள்ள ஆலிவ் பழத்தில் கருப்பு மற்றும் பச்சை நிறமுள்ள ஆலிவ்கள் தான் மிகவும் சிறந்தது. இவைகளை உட்கொண்டால் எலும்புகள் வலிமையடைவதுடன், புற்றுநோய்கள் தடுக்கிறது.

### டிராகன் பழம்

டிராகன் பழம் தென் ஆசியாவில் உள்ளது. தித்திக்கும் சுவையைக் கொண்ட இந்த பழமானது, இதய நோய்களின் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.

### ரம்புத்தான் பழம்

ரம்புத்தான் பழம் தெற்காசியாவை தாயகமாக கொண்டது. இந்த பழத்தில் புற்றுநோயை எதிர்த்துப் போராடும் பொருள் நிறைந்துள்ளது. எனவே இது நீரிழிவு மற்றும் புற்றுநோய் வராமல் தடுக்கிறது.

### பேசன் பழம்

பிரேசிலை தாயகமாக கொண்ட இந்த பழத்தில் நார்ச்சத்து அதிகம் நிறைந்த மென்மையான தசைப்பகுதியைக் கொண்டது. இது புற்றுநோய் மற்றும் தூக்கமின்மை பிரச்சனையை குணமாக்குவதில் மிகவும் சிறந்தது.

### மங்குஸ்தான் பழம்

ஸ்ட்ராபெர்ரி சுவையில் இருக்கும் இந்த மங்குஸ்தான் பழம் சிறந்த மருத்துவ குணம் கொண்டது. மேலும் இது வயிற்றுப் போக்கிற்கு உடனடித் தீர்வளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்சீரகம் சாப்பிடுங்கள்: 20 நாட்கள்.. 15 கிலோ எடை குறையுமாம்....

வாசனை மிகுந்த மசாலா பொருட்களில் ஒன்றான சீரகம் உடல் எடையை வேகமாக குறைக்க உதவுகிறது என்பது உங்களுக்கு தெரியுமா?

அதிலும் சீரகத்தை தொடர்ந்து எடுத்து வந்தால், 20 நாட்களில் நல்ல மாற்றத்தைக் காணலாம்.

### ஆய்வு

தினமும் சீரகத்தை சாப்பிட்டு வருவதால், உடலின் மெட்டபாலிசம் அதிகரித்து, செரிமானம் சீராகி, கலோரிகள் வேகமாக எரிக்கப்பட்டு, உடல் எடை குறைகிறது என்று ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும் சீரகமானது மாரடைப்பைத் தடுத்து, ஞாபக சக்தி மற்றும் நோயெதிர்ப்பு மண்டலத்தின் சக்தியை அதிகரித்து, ரத்த சோகை, செரிமானம் போன்ற பிரச்சனைகளை வராமல் தடுக்கிறது.

### உடல் எடையை குறைக்க சீரகத்தை எப்படி சாப்பிட வேண்டும்?

2 டேபிள் ஸ்பூன் சீரகத்தை நீரில் போட்டு இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் அந்த நீரை கொதிக்க வைத்து, வடிகட்டி, அதில் சிறிது எலுமிச்சை சாற்றை கலந்து, அதை காலையில் தினமும் குடிக்க வேண்டும்.

சிறிது தயிரில் 1 டீஸ்பூன் சீரகப் பொடி சேர்த்து கலந்து தினமும் உட்கொண்டு வந்தால், உடல் எடையைக் குறைக்கலாம்.

1/2 டீஸ்பூன் சீரகப் பொடியை நீரில் சேர்த்து, அதோடு தேன் கலந்து தினமும் குடித்து வருவதன் மூலமும் உடலில் உள்ள கொழுப்புக்களைக் கரைத்து உடல் எடையைக் குறைக்கலாம்.

தினமும் சூப்புடன் சீரகப் பொடியை ஒரு டீஸ்பூன் சேர்த்து கலந்து குடித்து வந்தால், உடல் எடை விரைவில் குறையும்.

ஒரு பாத்திரத்தில் கேரட் மற்றும் பல்வேறு காய்கறிகளை சேர்த்து நன்கு வேக வைத்து, அதில் துருவிய இஞ்சி, எலுமிச்சை சாறு, சீரகப் பொடி ஆகியவற்றை சேர்த்து கலந்து, இரவு நேரத்தில் சாப்பிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Fast Food (துரிதஉணவு)சாப்பிட்டதும் இதை கட்டாயம் சாப்பிடுங்கள்!....

தற்போது துரித உணவுகளை சாப்பிடுவது அதிகமாகிவிட்டது. அதிலும் நகரத்தில் பணிபுரிவோர்க்கும் துரித உணவு என்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது. சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படும் இந்த ஆரோக்கியமற்ற உணவுகளை எடுத்து கொள்வதால் உடல்நல கோளாறுகளை அதிகம் சந்திக்கவேண்டியுள்ளது. இதனை தவிர்ப்பதற்காக சில ஆரோக்கிய உணவுகளை நாம் எடுத்து கொள்ளவேண்டும்.

**க்ரீன் டீ...**

க்ரீன் டீ உணவு பொருள்களின் மீதான நாட்டத்தினை தடுத்து, துரித உணவுகளால் செல்களில் ஏற்படும் பாதிப்பினை குறைக்கும்.

**முட்டை மற்றும் வெஜ் ஆம்லெட்...**

முட்டை மற்றும் காய்கறிகளால் தயாரிக்கப்பட்ட ஆம்லெட்டினை சாப்பிடும்போது பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் மதுவால் உடல் ஆரோக்கியம் பாழாவதை தடுக்கும்.

**தயிர் மற்றும் பெர்ரி பழங்கள்....**

தயிரில் பெர்ரிப்பழங்களை துண்டாக்கி துரித உணவுகளை உண்டப்பின் சாப்பிட்டால் குடல் அழற்சி மற்றும் காயங்கள் ஏற்படுவதை தடுத்து செரிமான கோளாறுகளை குறைக்கும்.

**தண்ணீர்....**

துரித உணவுகளை உட்கொண்ட பின் அதிகளவு நீரை பருகவேண்டும். இதனால் உடலில் சேர்ந்த டாக்ஸின்கள் வெளியேற்றப்படுவதோடு வயிறு உப்புச பிரச்சனையும் தடுக்கப்படும்.

**புதினா அல்லது இஞ்சி டீ....**

இஞ்சி அல்லது புதினா டீ யினை குடித்தால் செரிமான பாதைகள் சுத்தமாகி வயிற்று பிடிப்புகள் ஏற்படுவது தடுக்கப்படும்.

**ஓட்ஸ் மற்றும் பழங்கள்....**

இதில் உள்ள ஆன்டி ஆக்ஸிடெண்ட்கள் மற்றும் நார்ச்சத்துக்கள் ஒட்டு மொத்த உடலையும் சுத்தப்படுத்தி செரிமான மண்டலம் சீராக இயங்க உதவுகிறது.

**நீர்ச்சத்துள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள்.....**

அதிக நீர்ச்சத்தினை உடைய பழங்களான தர்பூசணி, முலாம் பழம், வெள்ளரிக்காய் போன்றவற்றினை சாப்பிடுவதன் மூலம் உடலில் உள்ள டாக்ஸின்கள் வெளியேற்றப்பட்டு ஊட்டச்சத்துக்கள் மற்றும் விட்டமின்களை கிடைக்க செய்து உடலை ஆரோக்கியமாக இருக்கும்.

**வாழைப்பழம்.....**

வாழைப்பழத்தில் உள்ள கனிமச்சத்துக்கள் துரித உணவுகளை அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதால் ஏற்படும் பக்கவிளைவுகளை தடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரகேசரி முன்னாள் பிரதம ஆசிரியர் க.சிவப்பிரகாசம்..... காலமானார்...

தகவல் - முருகபூபதி-
அவுஸ்திரேலியா



வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கந்தசாமி சிவப் பிரகாசம் வெள்ளியன்று 2017-04-14 ஆம் திகதி அமெரிக்காவில் வேர்ஜினியா மாநில மருத்துவமனையில் காலமானார்.

கடந்த சில மாதங்களாக சுகவீனமுற்றிருந்த அவருக்கு வயது 83. 1966 ஆம் ஆண்டு முதல், ஆரம்பத்தில் வீரகேசரியின் இணை ஆசிரியராகவும் பின்னர் பிரதம ஆசிரியராகவும் 1983 ஆம் ஆண்டு வரையில் பணியாற்றினார். 1983 இல் கொழும்பில் நடந்த இனக்கலவரத்திலும் பாதிப்புக்குள்ளாகியிருந்தார். அதன்பின்னர் தமது குடும்பத்தினருடன் அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்தார். அங்கு நீண்டகாலம் பொஸ்டன் மாநிலத்தில் வசித்தார். அவருடைய அன்புத்துணைவியாரும் சில வருடங்களுக்கு முன்னர் காலமானார்

பிரதீபா, சஞ்சீவன் ஆகிய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிவப்பிரகாசம் அவர்களுக்கு இரண்டு பேரக்குழந்தைகள்.

இலங்கையின் வடபுலத்தில் மாதகலில் பிறந்திருக்கும் சிவப்பிரகாசம் 1958 இல் பேராதனை பல்கலைக்கழகத்தில் அருணாசலம் விடுதியிலிருந்து கற்று பொருளாதார பட்டதாரியானவர்.

அங்கே பல மாணவர் இயக்க செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருக்கிறார். அங்கிருந்த இந்து மாணவர் சங்கம் மற்றும் தமிழ்ச்சங்கம் ஆகியனவற்றில் இணைந்து இச்சங்கங்களின் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார். பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய சில நாடகங்களில் நடித்திருக்கிறார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிட்ட நாடகங்களை தயாரித்து நெறிப்படுத்தியிருக்கிறார். பேராதனை பல்கலைக் கழகத்திலிருந்து பட்டதாரியாக வெளியேறிய சிவப்பிரகாசம் ,லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தில் இணைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குதான் இவரது இதழியல் பணி ஆரம்பமாகியது. கைலாசபதி தினகரனில் பிரதம ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் அங்கே சிவகுருநாதன் உட்பட மேலும் சிலருடன் ஆசிரிய பீடத்தில் துணை ஆசிரிய பொறுப்பை திறம்பட மேற்கொண்டிருந்தவர். சிவப்பிரகாசம். இதழியல் துறையில் பல்வேறு நுட்பங்களையும் இங்கேதான் முதலில் கற்றுக்கொண்டார்.

தினகரனில் பணியாற்றிய காலப்பகுதியில் ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா முதலான நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டு பல பயண இலக்கிய கட்டுரைகளையும் எழுதியவர். 1966 ஆம் ஆண்டு வீரகேசரியில் இணைந்து சில மாதங்களிலேயே மாலைத்தினசரியாக மித்திரன் பத்திரிகையை சிவப்பிரகாசம் அறிமுகப்படுத்தினார். அடுத்தடுத்து ஜோதி, நவீன விஞ்ஞானி முதலான இதழ்களையும் அறிமுகப்படுத்தினார்.

தமது இதழியல் பணிகளுக்கு மத்தியில் சட்டக்கல்லூரிக்கும் சென்று சட்டம் பயின்று சட்டத்தரணியானார். வீரகேசரியில் க. சிவப்பிரகாசம் பிரதமஆசிரியர் பொறுப்பிலிருந்தபோது இலங்கை அரசியலிலும் தமிழ்ச்சமூகத்திலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. குறிப்பாக 1971 ஜே. வி. பி. கிளர்ச்சி, 1972 இல் இலங்கை, சிறிமா அம்மையாரின் கூட்டரசாங்கத்தில் ஜனநாயக சோஷலிஸ குடியரசானது. பல்கலைக்கழக பிரவேசத்தில் தரப்படுத்தலினால் தமிழ்மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

அந்தப்பின்னணிகளுடன் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி - தமிழ் இளைஞர் பேரவை தோற்றம், யாழ். மேயர் துரையப்பாவின் படுகொலை, தந்தை செல்வா எம்.பி. பதவி துறப்பு. காங்கேசன் துறைத்தொகுதி இடைத்தேர்தல், வட்டுக்கோட்டைத்தீர்மானம், ட்ரயல் அட் பார் வழக்கு, 1977 இல் ஜே. ஆர், ஜயவர்தனா தலைமையில் ஐ.தே.க. ஆமோக வெற்றியுடன் அரசு அமைத்தது. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானது.

அவருக்கு எதிரான நம்பிக்கை இல்லாத்தீர்மானம், முருங்கன் காட்டினுள் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை உட்பட மூவரின் படுகொலைகள், புலித் தடைச் சட்டத்தின் உருவாக்கத்திற்கு தூண்டுகோலாக இருந்த வீரகேசரியில் மாத்திரம் வெளியான ஒரு பரபரப்பான புலிகளின் பிரசுரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977, 1981 கலவரம், யாழ். நூலகம், ஈழநாடு எரிப்பு, எம்.பி. வெ. யோகேஸ்வரன் உயிர்தப்பிய சம்பவம், தமிழர் கூட்டணி எம்.பி.க்களின் வெளியேற்றம், 1983 இனச்சங்காரம் , இலங்கைத்தமிழர்கள் பெருமளவில் புலம்பெயர்வு இப்படிப்பல.

இத்தகைய நெருக்கடியான தருணங்களில் தமிழ் மக்களின் குரலாகவும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை உலக அரங்கில் முன்வைக்கும் ஊடகமாகவும் விளங்கிய வீரகேரியின் பிரதம ஆசிரியர் பொறுப்பிலிருந்தவர் .

க. சிவப்பிரகாசம் பயண இலக்கியம் எழுதுவதிலும் ஆற்றல் மிக்கவர் அவரது சோவியத் பயணக்கதை நூல் "சிரித்தன செம்மலர்கள்" 1975 ஆம் ஆண்டின் இறுதியில் சோவியத் நாட்டுக்குச்சென்று சுற்றுப்பயணம் மேற்கொண்டு திரும்பிய சிவப்பிரகாசம் தமது பயண அனுபவங்களை வீரகேசரி வாரவெளியீட்டில் 12 வாரங்கள் பகிர்ந்துகொண்டார். இந்தப்பயணக்கதை பின்னர் 1976 ஜூலையில் வீரகேசரி பிரசுரமாக வெளியானது. இனக்கலவர் காலத்தில் தமது அனுபவங்களையும் ஆங்கிலத்தில் நூலாக எழுதி வெளியிட்டிருக்கிறார். வீரகேசரி நிறுவனத்தில் ஊழியர் நலன்புரிச்சங்கத்திலும் சிவப்பிரகாசம் தலைவராக பதவி வகித்தவர். பல நல்ல திட்டங்கள் இவரது பதவிக்காலத்தில் நடந்திருக்கின்றன.

------------------

## புதிய துணைவேந்தர்........

யாழ்.பல்கலைகழக புதிய துணை வேந்தராக பேராசிரியர் விக்னேஷ்வரன் 01-05-2017ல் பதவியை பொறுப்பேற்றுள்ளார்.. யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணத்திடமிருந்து பதவியை பொறுப்பேற்றுள்ளார். அண்மையில் யாழ்.பல்கலைகழகத்தின் புதிய துணைவேந்தர் தேர்வுக்கான தேர்தல் நடைபெற்றிருந்தது. இதில் பேராசிரியர் வேல்நம்பி, பேராசிரியர் சற்குணராசா மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதனடிப்படையில் இறுதி தீர்மானத்தை ஜனாதிபதியே எடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் யாழ்.பல்கலைக்கழகத்தின் 8வது துணைவேந்தராக நியமனம் பெற்றுள்ளார். முன்னாள் துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணத்திடமிருந்து துணைவேந்தருக்கான பொறுப்புக்களை பெற்றுகொண்டார் இதேவேளை தேர்தல் மூலம் பேராசிரியர் சற்குணராஜா முதலாவதாக தேர்வு செய்யப்பட்டிருந்த நிலையில் அவருக்கு பின் இருந்த விக்னேஸ்வரன் துணைவேந்தராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியா-ஜேர்மனி-ஐரோப்பியயூனியன்...

ஐரோப்பிய யூனியன் 1946ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 70 வருடங்கள் நிறைவுகண்டுவிட்டது. இந்த அமைப்பில் நீண்டகாலமாக அங்கத்துவம் வகித்த நாடான பிரித்தானியா விலகிக்கொள்வதற்கு முடிவெடுத்தது. அதன்படி 2018ம் ஆண்டில் முற்றாக விலகிக்கொள்ளும் எனத்தெரிய வருகின்றது. எனவே ஜேர்மனி-பிரித்தானியா-ஐரோப்பிய யூனியன் பற்றிய சிறுகுறிப்பை இங்கே காண்போம்....

A-பிரித்தானியா ஐரோப்பிய யூனியனிலிருந்து விலகும்போது எனைய நாடுகள் செலுத்தவேண்டிய மேலதிக தொகை..

1-ஜேர்மனி + 2.50 பில்லியன் யூரோ
2-பிரான்ஸ் + 1.87 " "
3-இத்தாலி + 1.38 " "
4-ஸ்பெயின் + 0.91 " "
5-நெதர்லாந்து + 0.54 " "

B-பிரித்தானியர்கள் எனைய ஐரோப்பிய நாடுகளில் வசிப்பவர்கள் வரிசையில்

1-ஸ்பெயின் - 2.97.000 பேர்
2-அயர்லாந்து - 1.21.000 "
3-ஜேர்மனி - 97.000 "
4-நெதர்லாந்து - 44.000 "
5-இத்தாலி - 27.000 "

C-பிரித்தானியாவில் வசிக்கும் வெளிநாட்டவர்களில் ஆகக்கூடுதலானவர்கள்.

1-போலந்து - 9.16.000 பேர்
2-அயர்லாந்து - 3.33.000 "
3-ருமேனியா - 2.33.000 "
4-போத்துக்கல் - 2.19.000 "
5-ஜேர்மனி - 1.35.000 "

D- 4.00.000 ஜேர்மனியர்கள் வியாபாரம் மற்றும் கம்பனிகளில் பிரித்தானியாவில் வேலை செய்கிறார்கள்.

E- 150 பில்லியன் யூரோ வியாபார மற்றும் கம்பனிகளால் வருடாந்தம் வருமானமாக வரும் தொகையாகும்

F- 40 பில்லியன் யூரோ மொத்த வருமானத்தில் இத்தொகை கார் மற்றும் வாகனங்களால் பெறப்படும் வருமானமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G-2016ம்ஆண்டில் ஜேர்மனி பிரித்தானியாவிடம் இறக்குமதி -36 பில்.யூரோ
2016ம் ஆண்டில் பிரித்தானியா ஜேர்மனியிடம் இறக்குமதி-86 பில்.யூரோ

H-பிரித்தானியாவிற்கு ஜேர்மனி ஏற்றுமதி செய்தது..

| | | | |
|---|---|---|---|
| 2009ம் ஆண்டில் | - 53 பில்.யூரோ | 2013ம் ஆண்டில் | - 71 பில்.யூரோ |
| 2010ம் " | - 59 " | 2014ம் " | - 79 " |
| 2011ம் " | - 66 " | 2015ம் " | - 89 " |
| 2012ம் " | - 71 " | 2016ம் " | - 86 " |

I-ஏற்றுமதி செய்த பொருட்களின் கூடிய வருவாய் கொண்டவை..

| | | |
|---|---|---|
| 1-மதுபானங்கள் குடிவகைகள் | - | 4.714 மில்லியன் யூரோ |
| 2-சொக்கலேட் வகைகள் | - | 764 " " |
| 3-பியர்வகைக் குடிபானங்கள் | - | 686 " " |
| 4-மீன் உணவு வகைகள் | - | 667 " " |
| 5-பாலுணவுப் பொருட்கள் | - | 575 " " |

J-உள்நாட்டு உற்பத்தி வீதம்.

பிரித்தானியா - 1.8%

ஐரோப்பிா யூனியன் நாடுகள் - 1.9%

K-மக்கள்தொகை..

பிரித்தானியா - 65 மில்லியன் ஜேர்மனி - 82 மில்லியன்

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் - 510 "

L- ஒருவருக்கான வருடாந்த வருமானம் 2016ல்..

பிரித்தானியா - 31.400 யூரோ

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் - 26.900 "

M-வேலையில்லாதோர் தொகை 2016ல்..

பிரித்தானியா - 4.8 மில்லியன் பேர்

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் - 8.5 " "

N-2016ல் வணிக உற்பத்தி வீதம்.

பிரித்தானியா - 47.5%

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் - 10.1%

P-2016 ஜனவரியில் 1 பிரித்தானியப் பவுண்ஸ் 1.35 யூரோவாக இருந்தது. 2017 ஜனவரியில் இதன் பெறுமதி 1.15 - 1.20 யூரோவாகக் குறைவடைந்திருக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மடியின் சுகம்



வாழ்வின் ஒளிவிக்கே எனை வாழவைத்த விழிச்சுடரே
வார்த்தைகளின் சத்தியமே நான் வாழகின்ற மனச்சுடரே
கூர்மையான சொற்சுடரே நற்குணந் தந்த சுடர்விளக்கே
சீர் பெற்ற சிந்தனையே என் சிறப்புக்குள் மிளிர்பவளே

உறவெல்லாம் இணைத் தெடுத்து பிரிவற்ற வாழ்வளிப்பாய்
உண்ணுகின்ற வேளையெலாம் உனை மறவா நினைவளிப்பாய்
தாயென்ற பெயர் கொண்டு தன்னிகரிலாப் பாசமளிப்பாய்
தாயே உனைப்போலொரு தெய்வம் நானுந்தான் தேடுகிறேன்.

சொற்களிலே தேனிருக்கும் அதில் சொல்லிவைத்த பொறுப்பிருக்கும்
வற்றிவிடாக் கடமையிலே எம் வாழ்க்கையின் ஒளியிருக்கும்
கற்றுத்தந்த பாடத்திலே எம் கண்ணிய வாழ்விருக்கும்
பெற்றுக்கொண்ட போதனையில் எம் புண்ணிய செயலிருக்கும்

கட்டுக்கட்டாய்ப் பணமிருந்தும் எம் தாயன்பு போலாமோ
சொத்துச் சொத்தாய்ச் சொந்தமிருந்தும் தாய்ச்சொந்தம் போலாமோ
கட்டுக்கடங்கா சுகமிருந்தும் தாய்மடியின் சுகம் போலாமோ
விட்டுவிட்டே சென்றாலும் எம்மனம் விட்டுச் செல்லுமோ

தொட்டிலிலே போட்டஅன்பை பெட்டியிலே அனுப்பி வைத்தோம்
தோளினிலே போட்ட பாசமதை காட்டினிலே கொண்டெரித்தோம்
கட்டியணைத்த நேசமதை காட்சிப் படமாய் ஆக்கிவிட்டோம்
காலமெல்லாம் கண்ணீர் தேங்கி கண்ணுக்குள்ளே கட்டிவிட்டோம்
அஹறன்பென்றால் அது அம்மா. அந்த அம்மாக்கு மகுடம் சூட்டும் இவ்
இந்நாளில் அனைத்து அன்னையர்க்கும் அன்னையர்தின வாழ்த்துக்கள்!...

கௌரி - ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி - திருச்சி விமான சேவை??.....

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு ஒரு வேண்டுகோள்!...

பலாலி-திருச்சி விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா நாட்டில் இனங்களுக்கிடையில் சமாதானம், அமைதி, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு போன்றவற்றை நிலைநாட்டுவதற்கு தலைவியாகத் தற்போது இலங்கை அரசால் நியமனப் பெற்றுள்ளார். இவ்விடையம் வரவேற்கத்தக்க விடையமாகும்.

திருமதி சந்திரிகா அவர்கள் அண்மையில் யாழ்ப்பாணம் சென்ற வேளையில் தான் அடுத்தமுறை வரும்போது நல்ல செய்தியுடன்தான் வருவேன் எனக்கூறிச்சென்றுள்ளார். அம்மையார் கொண்டுவரவுள்ள நற்செய்திக்குள் பலாலி-திருச்சி விமான சேவையும் ஒன்றாக அமைய ஆவன செய்துதருமாறு ஜேர்மனியில் வசிக்கும் ஊடகவியலாளர் திரு சோம.சிவ.குலநாயகம் அவர்கள் தமிழ்ப்பொது மக்கள் சார்பில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருமதி சந்திரிகா அம்மையாரிடமும் தற்போதய வெளியுறவு அமைச்சர் கௌரவ மங்கள சமரவீராவிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார். எழுதி அனுப்பிய ஆங்கிலக் கடிதத்தை மறுபக்கத்தில் காணலாம்.

அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டதாவது..கிட்டத்தட்ட இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பலாலி - திருச்சி விமான சேவை நிறுத்தப்பட்டிருக்கிறது. இச்சேவையானது முன்னர் குறைந்த காலநேரத்திலும் குறைந்த பணச்செலவுடனும் வடபகுதியிலிருந்து தமிழகம் சென்று பல கோவில்களை முன்னர் தரிசித்திருக்கிறார்கள் தமிழர்கள். ஆனால் இது இடை நிறுத்தப்பட்ட படியால் தமிழர்கள் பெரும் பணச்செலவையும் வீண் பிரயாண நேரச்செலவையும் பல இடையூறுகளையும் கடந்த காலங்களில் சந்தித்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பலாலி - திருச்சி விமானப் பயணமானது ஆக நாற்பத்தைந்து அல்லது ஒரு மணி நேரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கடந்த இரு சகாப்தங்களுக்கு மேலாகத் தமிழ் யாத்திரிகர்கள் தென்னிந்தியக் கோவில்களைத் தரிசிப்பதற்குயாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்று பின்னர் கொழும்பிலிருந்து திருச்சி சென்றுவந்துள்ளதால் பெரும் பணச்செலவும் வீண் நேரச்செலவையும் சந்தித்து வந்துள்ளனர்.

அதாவது உள்நாட்டுப் பிரயாணத்திற்குச் சில சமயங்களில் யாழ்ப்பாணத் தி லி ருந்து கொழும்புக்குத் தரைவழிப் பயணத்திற்கு ஒன்று இரண்டு நாட்கள் செல்லும். சிலசமயம் கொழும்பில் அல்லது கட்டுநாயக்காவில் , அல்லது நீர்கொழும்பில் தங்கி நிற்பதற்காக விடுதிக்குப் பணம் செலவு செய்யவேண்டிய நிலையில் இருந்துவருகின்றது.

பலாலி - திருச்சி விமான பயணச் செலவிலும் பார்க்கக் கட்டுநாயக்கா - சென்னை விமானப் பயணத்திற்கு நான்கு மடங்கு செலவை எதிர்கொண்டும் திரும்பி வருவதற்கு அதே நேரகாலமும் பிரயாணச் செலவும் மற்றும் விடுதிச் செலவும் செய்தே தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையாகும்.

நாட்டில் போர்ச்சூழல் முழுந்தும் இன்றும் சுமுகநிலை தோன்றாமை வருந்தத்தக்க விடையமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை நாடு வழமைக்குத் திரும்பியுள்ளது என்று "டமாரம்" அடித்துக்கொண்டிருக்கும் இந்நிலையில் இன்றைய நல்லாட்சியின் ஓர் அம்சமாக இடைநிறுத்தி வைக்கப்பட்ட பலாலி - திருச்சி விமான சேவையை மீண்டும் ஆரம்பித்து வைத்துத் தமிழ் மக்களின் அபிலாசைகளில் ஒன்றான இதையும் கவனத்திற்கொண்டு ஆவன செய்து தருமாறு யாத்திரிகர்கள் சார்பில் சந்திரிகை அம்மையாரைக் கேட்டுள்ளார்.

இக்டிதத்தின் பிரதி ஒன்று வடமாகாண முதலமைச்சரின் கவனத்திற்கும் அனுப்பப்பட்டதாகத் திரு குலநாயகம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

-------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகச் செய்திகள் சில.......

### 6,500பேர் சேவையிலிருந்து விலகினர்

இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட மூன்றுமாத காலப்பகுதியில், 6,500 பேர், பொதுமன்னிப்பின் பேரில் சேவையிலிருந்து விலகியுள்ளதாக, இராணுவ ஊடக பேச்சாளர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.

### வடக்கு, கிழக்கில் கடும் வறட்சி: 7 இலட்சம் பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் கடும் வறட்சியினால் 6,95,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் வறட்சியினால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. குடிப்பதற்கு நீர் இன்றி பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். வறட்சியினால் வட மாகாணத்தில் 2,36,346 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

### இலங்கை மிக மோசமான பட்டியலில் உலகளவில் 2ஆம் இடம்..!

கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற போரின் போது காணாமல் போதல் என்பது இலங்கையில் சர்வசாதாரண விடயமாகவே சில தரப்பினரால் பார்க்கப்படுகின்றது. அந்த வகையில், காணாமல் போதல், பலவந்தமாக காணாமல் போகச் செய்தல் ஆகிய விடயங்களில் உலக அளவில் இலங்கை 2 ஆவது இடத்தை பிடித்துள்ளது. குறித்த விபரங்களை கொழும்பில் இடம்பெற்ற செயலமர்வின்போது, பலவந்தமாக கடத்தல் மற்றும் காணாமல் போதல்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் முகவரகம் தெரிவித்தது.

### டெங்கினால் 24 பேர் மரணம்.....

இவ் வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் சுமார் 16 ஆயிரத்து 500 டெங்கு நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 24 பேர் மரணத்தை தழுவியுள்ளார்கள்.

### வீழ்ச்சி கண்டுள்ளது....

உயர் அரச பதவிகளை வகித்த தமிழ் அதிகாரிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது. 1956ல் 30 சதவீதமாகக் காணப்பட்ட தமிழ் அரச உயர் அதிகாரிகளின் எண்ணிக்கையானது 1970ல் ஐந்து சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உயிரிழப்புக்கள்...

இவ்வருட காலாண்டுப் பகுதியில் வீதி விபத்துகளில் 936 பேர் உயிரிழப்பு!இந்த ஆண்டு இதுவரை வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 936 ஆக அதிகரித்துள்ளதாக வீதி பாதுகாப்பிற்கான தேசிய சபை அறிவித்துள்ளது.கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வீதி பாதுகாப்புக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.மோட்டார் சைக்கிள் விபத்துக்களினாலேயே அதிக உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதாக சபையின் செயலாளர் டாக்டர் சிசிர கோத்தாகொட தெரிவித்துள்ளார்.முச்சக்கரவண்டியில் பயணித்தவர்கள் மற்றும் பாதசாரிகள் விபத்துக்களில் அதிகமாக உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்தார்.கவனயீனம் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்துதல் என்பவற்றினாலேயே அதிக விபத்துக்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

### புகைத்தல்,போதைப்பொருள் பாவனையினால் வருடாந்தம் முப்பத்தையாயிரம் பேர் பலி....

போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாவனையினால் ஏற்படும் நோய்களினால் இலங்கையில் வருடாந்தம் முப்பத்தையாயிரம் பேர் பலியாவதாக சுகாதார மற்றும் சுதேஷ வைத்தியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. அவ்வமைச்சு மேற்கொண்ட மதிப்பீட்டிலேயே குறித்த தரவு கண்டறியப்பட்டுள்ளது.

### இலங்கையில் நாளொன்றுக்கு 800 இற்கும் மேற்பட்ட கருக்கலைப்புகள்...

இலங்கையில் திருமண வயதை எட்டியுள்ள பெண்களில் 6சதவீதமானவர்கள் திருமணத்திற்கு முன்னரே கர்ப்பம் தரிக்கின்றார்கள். நாளாந்தம் இலங்கையில் 800 இற்கும் மேற்பட்ட கருக்கலைப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தற்கொலையில் உலகத்தில் நான்காவது இடத்தில் இலங்கை இருக்கின்றது. மது பாவனையில் மட்டக்களப்பு முன்னிலையில் இருக்கின்றது. இவ்வாறான-தொரு சமூகத்தை உருவாக்கியது யார் என்ற கேள்வி உங்கள் அனைவர் மத்தியிலும் இருக்கும். வேறுயாருமல்ல நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் இவ்வாறானதொரு சமூகத்தை உருவாக்கியிருக்கின்றோம்.

### கொலன்னாவையில் பலியானோரின் எண்ணிக்கை 20 ஆக உயர்வு.!

கொலன்னாவை, மீதோட்டமுல்லை குப்பைமேடு சரிந்ததில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளதாக பொலிஸ ார் தெரிவித்துள்ளனர். இதேவேளை, குறித்த அனர்த்தத்தால் 145 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் 180 குடும்பங்களைச் சேர்ந்த 625 பேர் பாதிக்கப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏழு நாட்களில் 16 கோடி வருமானம்!...

அதிவேக நெடுஞ்சாலைகளின் ஊடாக சுமார் ஐந்து இலட்சத்து 50 ஆயிரம் வாகனங்கள் பயணித்துள்ளதாக நெடுஞ்சாலை முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த 7ம் திகதி முதல் 13ம் திகதி வரை இந்த வாகன போக்குவரத்து இடம்பெற்றுள்ளது. இதன்மூலம் 160 மில்லியன் ரூபா வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளது. இந்தக் காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலைகளில் 12 சிறு வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

### பாலியலில் சிறுவர்கள்...

இலங்கையில் 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு கல்வி வலய முன்பள்ளி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிக்கல்விப்பணிப்பாளர் எம்.புவிராஜ் தெரிவித்தார்.

### பிள்ளைகள் சிறுவர்கள்...

இலங்கையில் 15 சதவீதமான பிள்ளைகள் மன அழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். இது சிறியதொரு தொகையல்ல. அதே போல் எமது நாட்டில் 15 சதவீதமான பிள்ளைகள் நீரிழிவு நோய்க்கு ஆளாகியிருக்கின்றார்கள். இது மிகவும் கவலைக்குரிய செய்தியாகும். 14 சதவீதமான பிள்ளைகள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை எடுப்பதற்கு முன்னரே பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்றார்கள். 13 தொடக்கம் 15 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளில் 11சதவீதமான பிள்ளைகள் புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியிருக்கின்றார்கள். இவை சிறுவர்கள் தொடர்பாக சுகாதார அமைச்சு, சிறுவர் செயலகம் மற்றும் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட அண்மைக்கால தகவல்களாகும்.

### ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விதவைகள்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்ததினால் பாதிக்கப்பட்டு ஒரு ல்சத்திற்கும் அதிகமான பெண்கள் விதவைகளாகக் காணப்படுகின்றார்கள் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழர் எண்ணிக்கை அரசதுறைகளில் வீழ்ச்சி..

சிறிலங்கா இராணுவத்தில் 1956ல் 40 சதவீத தமிழர்கள் பணியாற்றிய போதிலும் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர் இந்த வீதமானது தற்போது ஒரு வீதமாகக் குறைவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச்செய்திகள் சில......

### பாலியல் குற்றங்கள்...

ஐரோப்பிய நாடுகளில் பாலியல் குற்றங்கள் அதிகம் நடைபெறும் நாடுகளில் ஸ்வீடன் உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் 2009 ஆம் ஆண்டில் தான் அதிக வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளன. அதாவது 7,590 புகார்கள் பதிவாகியுள்ளது. 58 சதவீதமாக குற்ற எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

### பட்டினியில் வாடும் ஆப்பிரிக்க நாடுகள்...

பல மில்லியன் மக்கள் உயிரிழக்கும் அபாயம் நைஜீரியா, சோமாலியா, தென் சூடான் போன்ற ஆப்பிரிக்க நாடுகளில் 1.4 மில்லியன் சிறார்கள் பட்டினியால் உயிரிழக்கக்கூடிய அபாயமுள்ளதாக UNICEF எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆப்பிரிக்க நாடான தென் சூடானில் தற்போது ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டோர் உணவின்றி தவித்து வருகிறார்கள். இன்னொரு நாடான ஏமனில் இரண்டு வருட தொடர்ச்சியான உள்நாட்டுப் போரினால் சுமார் 10,000 பேர் இதுவரை உயிரிழந்துள்ளதாகவும், போரின் விளைவாக மக்கள் கடும் உணவுத் தட்டுப்பாட்டுக்கு ஆளாகியுள்ளதும் தெரியவந்துள்ளது. ஏமனிலுள்ள 7.3 மில்லியன் மக்களுக்கு அவசர உதவி தேவைப்படுவதாக ஐ.நா அலுவலகம் தெரிவித்துள்ளது.

### புலம்பெயர்வு...

புலம்பெயர்வாளர்களில் இந்தியர்களே அதிகம்உலக அளவில் இந்தியர்கள் அதிகளவில் புலம் பெயர்ந்துள்ளனர், என ஐ. நா. சபை உலகளவில் புலம் பெயர்ந்தவர்களுக்கான ஆய்வறிக்கையில் வெளியிட்டுள்ளது. உலகளவில் 2016 ஆண்டு கணக்கு படி சுமார் 1.60 கோடி இந்தியர்கள் மற்ற நாடுகளில் குடியேறியுள்ளனர். இதில் 40 சதவீதம் இந்தியர்கள் குறிப்பிட்ட மூன்று நாடுகளில் மட்டும் குடியேறியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு நாடுகளில் சுமார் 30 லட்சம் இந்தியர்களும், பாகிஸ்தான் மற்றும் அமெரிக்காவில் தலா 20 லட்சம் புலம் பெயர்ந்த இந்தியர்களும் வசித்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரைஇத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

| | | |
|---|---|---|
| 01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா) | - 480-00 யூரோ |
| 02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - மட்டக்களப்பு | - 480-00 யூரோ |
| 03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகெளரி | - சுவிஸ்லாந்து | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - கிளிசொச்சி | - 480-00 யூரோ |
| 04. செல்வன்.நகுல்.துரையரங்கன் | - ஜேர்மன் | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - திருகோணமலை | - 480-00 யூரோ |
| 05. செல்வி.அஜந்தி.அழகராசா | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 06. திருமதி.பராசக்தி.பரமசாமி | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 07. திருமதி.ரதி.சின்னத்துரை | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 08. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 09. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 10. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - மட்டக்களப்பு | - 240-00 யூரோ |
| 11. செல்வி.சுகிர்தா தவராஜ் | - ஜேர்மனி | |
| ((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - கிளிநொச்சி | - 150-00 யூரோ |
| 12. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - வவுனியா | - 200-00 யூரோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 28.02.2017 + 181-44

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி. பராசக்தி. பரமசாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
06. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07.திருமதி றஞ்சனா தவராஜ் - Wadgassen + 150-00
(ஆதரவற்றசிறார் ஒருவரின் கல்விச்செலவு அன்பளிப்பு)
08. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00
09.செல்வி ஸ்ரெவ்வானி மகாலிங்கம் -Oberhausen + 150-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)
10. செல்வன் பிரதீஸ் சிறீமோகன் -Dusseldorf + 50-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)
11. செல்வி காத்மி வரததராசன் -Dusseldorf + 50.00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

-------

1081-44




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | + 1081-44 |

அனுப்பியது: -

1. ரூத் மிஷன்.ஜெயபுரம் - கிளிநொச்சி

| | | |
|---|---|---|
| சிறுவர் இல்லம் | - 800-00 | |
| வங்கிக்கட்டணம் 1x 35-00 | - 35-00 | |
| | ------- | |
| | - 835-00 | |
| வங்கிவரி:- (01.03.2017 - 31.032017) | - 09-76 | |
| (01.04.2017 - 30.04.2017) | - 12-46 | |
| | ---------- | |
| | - 857-22 | - 857-22 |
| | | ---------- |
| - 31-12-2016ல் மீதி கையிருப்பு | | +224-22 |
| | | ---------- |


Ruth Mission

No.[illegible], Jeyapuram North,

Kilinochchi

No: 242 10.02.2017

Received with Thanks the Sum of Rupees Seventy seven thousand seven hundred + Sixty Rs. only

From Mr. V. Sivarajah

On Account of Donation

Rs: 77,760

Director/Manager

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RUTH MISSION

Jeyapuram north,
Jeyapuram

Email : [illegible]
T.p : [illegible]

15/02/2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துத் துறையில் அறுபது ஆண்டுகால நாயகன்........ 75வது பிறந்தநாள் 21.05.2017



திரு.கணபதிப்பிள்ளை பத்மகுணசீலன்

எழத்துத்துறையில் வைரவிழாக்கண்டு நாயகனாக விளங்குபவர் மண்ணின் எழத்தாளரான திரு க பத்மகுணசீலன் ஐயா அவர்களை வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறோம். கடந்த 30 வருடங்களாக ஜேர்மனி-கீல் நகரில் வசித்துவரும் இவர் தமிழ்-சிங்களம்-ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்துவம் பெற்றவராவர்.

யாழ் நல்லூரைப் பூர்வீகமாகக்கொண்ட இவர் நுவரெலியா வட்டவளையில்தான் பிறந்தவராவர். யாழ் செங்குந்தா இந்துக்கல்லூர், அனுராதபுரம் சென் ஜோசப் கல்லூரி,இரத்தினபுரி சென் அலோசியஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவர். இலங்கையின் பல அரச திணைக்களங்களில் பல உயர் பதவிகளை வகித்தார். குறிப்பாக தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழிகளின் ஆசிரியராகவும் விரிவுரையாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் நீண்டகாலம் பணிபுரிந்துவிட்டு 1987ஆண்டில் ஜேர்மனி வந்து சேர்ந்தார்.

ஜேர்மனியில் தமிழ்பாடசாலையின் ஆசிரியராகவும் பொறுப்பாளராகவும் பல வருடங்கள் பணிபுரிநதிருந்தார். தாயகத்தில் வெற்றிமணி, வீரகேசரி, தினகரன், தினபதி மற்றும் சிங்கள ஆங்கில பத்திரிகைகளுக்கும் பல ஆக்கங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்து வந்த இவர் ஜேர்மனியிலும் வெற்றிமணி, மண், போன்ற சஞ்சிகை பத்திரிகைகளிலும் எழுதிவந்துள்ளார்.

தனது 15வது வயதில் எழுத்துத்துறையில் பிரவேசித்த இவர் தற்போது 60 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளார். கட்டுரைகள்,சிறுகதைகள், கவிதைகள் மற்றும் மொழி பெயர்ப்பு இலக்கியங்களையும் படைத்திருப்பதுடன் லண்டன் தமிழ் வானொலியிலும் பல தடவைகள் தனது செவ்வியையும் வழங்கியிருக்கிறார். ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பனரான இவரை இச்சங்கம் பாராட்டிக் கௌரவித்துள்ளது. மண் சஞ்சிகையின் 20 வது ஆண்டுவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட இவர் விழாவில் கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.
இலங்கை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அலுவலகத்தின் இரத்தினபுரி-கோகலை பிராந்திய (சபரகமுவ மாகாணம்) ஆணையாளராகவும் கடமையாற்றினார். இலங்கையில் கூட்டுறவுத்திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றில் உயர் அதிகாரியாகவும் மொழி பெயர்ப்பாளராகவும் பல ஆண்டுகள் கடமைபுரிந்து தமிழ் ,சிங்கள, இஸ்லாமிய மக்களுக்கு அரும்பெரும் சேவையாற்றியதுடன் தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பத்திரிகையிலும் தமிழ், சிங்களம் ஆங்கில மொழிகளில் தனது படைப்புக்களை அவ்வப்போது எழுதிப் பாராட்டையும் பெற்றுக்கொண்டவராவர்.

தாயகத்தின் வலுவிழந்தோருக்கு உதவும் பணிகளை இற்றைவரை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்க விடையமாகும். மண் சஞ்சிகையோடு இணைந்து தாயக வலுவிழந்தோருக்கு உதவும் பணிகளையும் மேற்கொண்டிருக்கிறார். இதை விட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தடனும் தொடர்புகளைப் பேணி வருவதுடன் அவ்வப்போது பல உதவிகளையும் தாயகத்திற்கு வழங்கி வருவது பாராட்டத்தக்க விடையமாகும். தற்போது 75 வது பிறந்தநாளைக் (21.05.2017)கொண்டாடிய இந்த முதுபெரும் எழுத்தாளர் 100 ஆண்டுகள் வாழவேண்டும் என மண்ணின் வாசகர்கள் சார்பில் வாழ்த்தி மகிழ்கிறோம்!....

எழுத்துத்துறையில் 1954ம் ஆண்டு ஆரப்பித்தவர் கடந்த 63 வருடங்களாக எழுதிவருகிறார் என்றால் இவரின் ஆற்றல், அறிவு, ஆளுமை, முயற்சி யாவும் பாராட்டப்பட வேண்டியதே. எழுபத்தைந்து வயதைப் பூர்த்தி செய்யும் அருமை அன்பரை மண்ணின் வாசகர்சார்பில் வாழ்த்தி மகிழ்கிறோம்!.. வாழ்க பல்லாண்டுகள்!..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மானுவேல் மாக்ரோன் - பிரான்ஸ் புதிய ஜனாதிபதி



மாக்ரோன் (Emmanuel Jean-Michel Frédéric Macron பிரெஞ்சு அரசியல்வாதியும் மூத்த குடியியல் பணியாளரும் முன்னாள் முதலீட்டு வங்கியாளரும் பிரான்சின் அரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஆவார். கொள்கையளவில் இவர் நடுநிலையாளராகவும் தாராளமயமானவராகவும் பார்க்கப்படுகிறார்.


பாரிசிலுள்ள நான்ட்ரே பல்கலைக்கழகத்தில் மெய்யியலில் பட்டம் பெற்றார் பின்பு முதுகலை பட்டத்தை மக்கள் தொடர்பில் அறிவியல் குடியியல் நிருவாக்கத்தில் 2004இல் பட்டம் பெற்றார். பின்பு இவர் வணிக ஆய்வாளராக வணிக ஆய்வு நிறுவனத்தில் பணியாற்றினார், பின்பு வங்கியில் முதலீட்டு வங்கியாளராக பணி புரிந்தார். சோசலிஸ கட்சியின் உறுப்பினராக 2004 முதல் 2009 வரை இருந்தார். 2012இல் பிரான்சுவா கொலந்து அமைச்சரவையில் துணை பொதுச்செயலாளராகவும் நிதி அமைச்சராகவும் இருந்தார், பின்பு 2014இல் அமைச்சரவையில் தொழில், வணிக, மின்னிமம் விவகாரம் போன்ற துறைகளுக்கு அமைச்சராக இருந்தார்.

En Marche கட்சியில் போட்டியிட்டு 66.1 வீத வாக்குகளைப்பெற்று (20.753.798) வெற்றி பெற்று பிரான்சின் ஜனாதிபதியாகியுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட National Front கட்சியைச் சேர்ந்த Marine Le Pen 33.9 வீத வாக்குகளையே பெற்றார். (10.644.118) கடந்த 07.05.2017 அன்று நடைபெற்ற தேர்தலில் 88 வீதமான வாக்காளர் வாக்களித்துள்ளனர்.

39 வயதுடைய (21.12.1977) புதிய ஜனாதிபதியின் மனைவி பெயர் Brigitte Trogneux இவர் ஜனாதிபதியைவிட 25 வயது கூடியவர் (வயது 64) என்பது குறிப்பிடத்தக்கதாகும். பள்ளி ஆசிரியரும் மாணவருமா இருந்தே திருமண பந்தத்தில் இணைந்துகொண்டனர். என்பதும் சுவார்சியமான செய்திதான். இருந்தாலும் ஆளுமை மிக்க தலைவராகக் கருதப்படும் புதிய ஜனாதிபதியின் ஆளுமையைப் பொறுத்திருந்து பார்ப்போம். வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

[illegible]
([illegible])

**தேவாரம் ஓதுதல்**

**தமிழ் இசைப்பாடல்**

வரவேற்புரை : [illegible]

தலைமையுரை : திரு. வ. சிவராஜா
(மண் சஞ்சிகை ஆசிரியர்)

பிரதம விருந்தினர் : Dr. திரு. [illegible]
([illegible])

சிறப்பு விருந்தினர் : திரு. [illegible]
([illegible] Sweet chilli, Dortmund)

[illegible] : [illegible]
([illegible]) Bäckerei Mülder Köln)

ஆய்வுரை : திரு. [illegible]
([illegible] ஜேர்மன் தமிழ் [illegible] சங்கம்)

**வாழ்த்து**
நடனம்

ஏற்புரை : திருமதி. [illegible]
நன்றியுரை : [illegible]
நிகழ்ச்சித் தொகுப்பு : திரு. [illegible]
([illegible])



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் களறி

**வரலாற்று ஆவணக்காப்பகம் மற்றும் நூலகம்**

"TAMILS KALARY"

Bibliothek und Archiv zur Geschichte der Tamilen

Tamils History Library and Archives

Bibliothèque et Archives de l'Histoire des Tamouls

சைவநெறிக்கூடம் - Europaplatz 01, 3008 Bern, Switzerland

☎ 0041 31 302 09 56 / 0041 78 645 30 42 / 0041 79 275 68 62

facebook.com/SaivanerikoodamSwiss www.saivanerikoodam.ch saivanerikoodam@hotmail.com

**பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழர் வரலாற்று வாழ்வியலை, பரவலை, தமிழர் தாயகத்தை சான்றுகளுடன் ஆவணப்படுத்தும் ஆவணக்காப்பகம் நிறுவ அனைவரையும் அழைக்கின்றோம்.**

**காலம்:** 19. 03. 2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிமுதல்



**இடம்:** ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

**Europaplatz 01, 3008 Bern**

வழிசெலுத்தி (Navigation) Freiburgstrasse. 170, 3008 Bern [illegible]

காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவு ஞானலிங்கேச்சுரத்தின் அன்னதானமாக அளிக்கப்படும்.

தமிழர்கள் வரலாற்று ஆவணங்களை ஓர் இடத்தில் அனைவரும் பெற்றுக்கொள்ளவும் ஆய்வுகளை மேற்கொள்ளவும் இளந்தமிழ்ச்சமூகம் தம் வேரையும் விழுதையும் அறிந்துகொள்ளவும் **"தமிழர் களறி"** வழிசெய்கிறது.



அன்புடன் சைவநெறிக்கூடம்



**தமிழினத்தின் காலச்சுவடு தமிழர் களறி**

[illegible] 078 697 70 25 [illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்டங்களில்
காணாமல்போனவர்கள் உறவுகளின் போராட்டம்....
பங்குனி-சித்திரை-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

ERDE

MANN
Germany / Ausgabe 183

# மூத்த கலைஞர் A.ரகுநாதன்

வருட சந்தா ஜேர்மனி 15€
ஏனைய நாடுகள் 20€

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org